# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

26-9-71


★

## உள்ளே......


கருப்பண்ணசாமி யோசிக்கிறார்!
(அறிஞர் அண்ணா)

மனோன்மணீய வாழ்த்தில் மறுவா?
(கட்டுரை)

எழுதத் துடிக்குதடா நெஞ்சம்!
(கட்டுரை)

சோழமாதேவி
(தொடர் கதை)


விலை 20 காசு



தன்மானத் தந்தையே!
தலைவர்க்குந் தலைவா!
வாழியவே, வாழி!

# எழுதத் துடிக்குதடா நெஞ்சம்!

சுற்றி வளைக்காமல் நேரடியாகவே செய்திக்கு வந்து விடுகிறேன்; சொல்ல நினைப்பதைச் சுருக்கமாகவே சொல்லி—விடுகிறேன்.

இது தமிழ் நாடும் இல்லை!

இங்கு வாழ்பவர்களும் தமிழர்கள் அல்லர்!!

கரிகால் பெருவளத்தானும் கண்ணகிக்குச் சிலையெடுத்த மான மறவன் செங்குட்டுவனும் விதைத்து விட்டுச் சென்ற 'மானவிதை' இங்கு முளைகூட விடவில்லை!!

தேக்கு மரத்தேகத்தில் தீவைத்துக் கொண்டு, உணர்வுத்தீயாக நின்றபோதும் 'வாழ்கதமிழ்'என்று வான் பிளக்க முழக்கமிட்ட தமிழ்த் தெய்வங்களின் வழிவந்தோர்கள் இங்கு எவரும் இல்லை!!

கண்களில் கனல் தெறிக்கக் "கயவனே' கண்டதுண்டமாக வெட்டியெறிவேன் உன்நாக்கை" என்று துடித்து எழத் துடிப்போர்களிடம் மன்னிப்பு வேண்டி சொல்லிக் கொள்ளுகிறேன் கண்டணக் கணைகளைத் தொடுக்க வேண்டிய இடமாக நானில்லை என்று!!

10-9-71 தினமணி நாளிதழில் வந்துள்ள கலையுலகப் பகுதியில் செய்திக்குப் பின்னால் என்ற தலைப்பில் வந்துள்ள ஒரு சின்னஞ்சிறு செய்தியைச் சுட்டிக்காட்டுகிறேன். அதற்குப் பிறகு, கண்டனக் கணைகளை வீசினாலும்சரி, கணைகளையே நாணேற்றி எய்தாலும் சரி மகிழ்வோடு ஏற்றுக் கொள்ளுகிறேன்.

ஆனால் ஒன்று...!

'செய்திக்குப் பின்னால்' பகுதியில் தினமணியார்செய்துள்ள கிண்டல் திருவிளையாடலையும், கேலி லீலைகளையும் புரிந்து கொண்ட பிறகு வெறும் காகிதக் கணைகளையாவது தினமணியாரின் திக்கு நோக்கிப் பாயவிடுவதை மறந்து விடாதீர்கள்.

எதையும் செய்யக் கூடிய நிலையில் நாடு இல்லா விட்டாலும், இப்போதைக்கு இதைக் கூடவா செய்யக் கூடாது!!

சற்று உன்னிப்பாகக் கவனியுங்கள்!!

"பிரஞ்சு நாட்டில் தீயவர்களுக்கும் சிலை செய்து வைக்கிறார்கள்! சிலையைப் பார்த்துத் தீயவர்கள் திருந்து வதற்காக" இப்படியொரு செய்தியைக் குறிப்பிட்டுவிட்ட தினமணியார் கீழே தன் கைவண்ணத்தைக் காட்டியுள்ளார்.

தினமணியாரின் கைவண்ணத்தைச் சுட்டுவதற்கு முன்னே, மீண்டும் உங்களை ஒன்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கூர்ந்து நோக்க மட்டும் மறந்து விடாதீர்கள்!!

"இதெல்லாம் சும்மா- தமிழ்நாட்டில் இன்னும் தீயவர்கள் திருந்தவில்லையே" புரிகிறதா? பொங்கி வழியும் நஞ்சு மனத்தாரின் கீழ்மை புத்தி தெரிகிறதா?

— பொடியன் —

புரிந்தது உண்மையென்றால் உடம்பே பற்றி எறியவேண்டுமே!! உள்ளம் கொதிக்க வேண்டுமே.

"பிரஞ்சு நாட்டில் தீயவர்களுக்கும் சிலை வைக்கிறார்கள்; சிலையைப் பார்த்துத் தீயவர்கள் திருந்துவதற்காக" என்று குறிப்பிட்டு, "தமிழ்நாட்டில் இன்னும் தீயவர்கள் திருந்தவில்லையே" என்றால், "தமிழகத்தில் தீயவர்களுக்குச் சிலை எடுக்கப் பெற்றுள்ளது" என்றுதானே பொருள்!!

சிலையாக நிற்கும் தீயவர்களைப் பார்த்தும் தமிழகத்தில் வாழும் தீயவர்கள் இன்னும் திருந்தவில்லை என்றுதானே பொருள்!!

உலகத் தமிழ் மாநாட்டையொட்டி சிலைகள் வைக்கப்பெற்ற பிறகு சென்னையைச் 'சிலையூர்' என்று தம் வயிற்றெரிச்சலைக் காட்டிக் கொண்டார்கள்.

அண்ணா மறைந்த பிறகு நாடெங்கும் அண்ணனுக்குச் சிலைகளெடுத்து மகிழ்ந்தோமே, அதன் பிறகு, "அப்பப்பா, பொழுது விடிந்தால் சிலைதானா? ஊரெல்லாம் சிலைதானா? சந்து பொந்து, மூலை முடுக்கெல்லாம் சிலைகளா?" என்று எரிச்சலை எழுத்தாக்கிக் காட்டினார்கள்.

தந்தை பெரியாருக்கு நாடெங்கும் சிலையெடுத்து மகிழ்ந்து வரும் வேளையிலும் பொருமிச் செத்தார்கள்!!

'வேண்டியவா'ளுக் கெல்லாம் சிலைகள் எடுக்கப் பெற்றபோது, 'திவ்வியமான கைங்கரியம்; பேஷா செய்யுங்கோ' என்றெல்லாம் தட்டிக் கொடுத்தவர்கள் இப்போது மட்டில் தேளாக மாறிக் கொட்டித் தீர்ப்பானேன்!!

பாரதியோடு பாவேந்தருக்கும் சிலையெடுத்ததாலா இந்தக் கோபம்!!

கம்பனோடு கண்ணகிக்கும் சிலை வைத்ததாலா இந்த மனக் காய்ச்சல்!!

வ. உ. சிதம்பரனாருக்குச் சிலையெடுத்தது வயிற்றெரிச்சலுக்கு உரியதா?

வீரமா முனிவர்க்கும், ஔவையாருக்கும் வான்புகழ் வள்ளுவர்க்கும் சிலை வைத்ததாலா இந்தச் சீற்றம்!!

தினமணியார் இவர்களில் யாரைத்தீயவர் என்றுகருதுகிறார்!!

மதிப்பிற்குரிய காமராசர் அவர்களைத் தீயவர் என்கிறாரா?

பொங்கி எழுந்த தமிழ்க் குலத்தைத் தன் புன்னகையாலே அடக்கி,'அழிக்கப்பட வேண்டிய தீமையின் உருவங்களுக்கு எல்லாம் ஆபத்து வாராமல் "நமக்குப் பகை அவர்களின் பண்பே தவிர, அவர்களல்ல" என்று வரங்கொடுத்த தெய்வம் அண்ணா அவர்களைத் தீயவர்கன் என்கிறாரா?

கூனிக்கிடந்த தமிழ்ச் சமுதாயத்தின் கூனலை நிமிர்த்தி தமிழர்களையெல்லாம் வேட்டிகட்டிக்கொண்டு நடமாட விட்டாரே பெரியார், அவரைத் தீயவர் என்கிறாரா?

உள்ளதை யெல்லாம் அள்ளிக் கொடுத்த வள்ளல் கலைவாணரைத் தீயவர் என்கிறாரா?

தினமணியார் யாரைத் தீயவர் என்கிறார்? எந்தத் தீயவரின் சிலையைப் பார்த்துத் தமிழகத்தில் தீயவர்கள் திருந்தவில்லையென்று சொல்லுகிறார்!!

சொல்லவேண்டிய அளவுக்குத் துணிவு இல்லையா?

(15-ஆம் பக்கம் பார்க்க)



# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10    ஆறு மாத சந்தா ரூ. 5

மலர் 8 | 26—9—71 | இதழ் 11

# கைவிடப்படவில்லை

மாநில சுயாட்சிக் கோரிக்கைபற்றி திராவிட முன்னேற்றக் கழகம் குரல் கொடுக்கத் தொடங்கிய பிறகு, துணைக்கண்டத்தின் பல மாநிலங்களிலும் இதன் எதிரொலி, கேட்கத் தொடங்கி இருக்கிறது.

குரலின் வேகமும், எண்ணிக்கையும் அதிகரிக்க அதிகரிக்க, பிரச்னையை புறக்கணித்துச் செல்லமுடியாத நிலையில் மத்திய அரசும் அவ்வப்போது ஏதோ சில காரணங்களையும், சாக்குப்போக்குகளையும் கூறிக்கொண்டிருக்கிறது. என்றாலும், தமிழக முதல்வர் அண்மையில், "சுயாட்சிக் கோரிக்கை"யினை ஒத்திவைத்திருப்பது கேட்டு சில ஏடுகளும், தலைவர்களும் கேலி மிகக் கலந்து பேசவும் எழுதவும் தலைப்பட்டிருக்கின்றனர். அவர்களுக்குப் பதில் தரும் வகையில்—

"இப்போதுள்ள மத்திய ஆட்சியின் அரசியல் சட்ட அமைப்பு முறையின்கீழ் — இருபதாண்டுக் கால ஆட்சியில், மாநிலங்கள் வளம் பெற வில்லை என்பதையும்,— அவைகள் வஞ்சிக்கப் பட்டிருக்கின்றன என்பதையும் நன்கு உணரப்பட்டிருக்கிறது.

"மாநிலங்கள் மத்திய அரசுக்கு எழுதுகின்ற கடிதங்களுக்கு 6 மாதங்களானாலும் பதில் கிடைப்பதில்லை; மாநிலங்களின் கோரிக்கைகளை அலட்சியப்படுத்தும் நிலையிலேயே மத்திய அரசு இருக்கிறது.

"நாம் மாநில சுயாட்சி கேட்பது, யாரையும் மிரட்ட அல்ல—அச்சுறுத்த அல்ல! அவர்களை அச்சுறுத்தி—மிரட்டி ஆட்சியில் நீடிக்க வேண்டும் என்பது நமது எண்ணம் அல்ல!

"அதிகமான பொறுப்புக்களைச் சுமக்க முடியாமல் சுமந்து கொண்டிருக்கும் மத்திய அரசிடமிருந்து, 'பொறுப்புக்களைப் பகிர்ந்து தாருங்கள்—அதன்மூலம் மக்களுக்குத் தொண்டாற்ற வழிகோலுங்கள்' என்ற நல்ல நோக்கத்துடன் தான் கேட்கிறோம்!

"மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கேட்பது பிரிவினை வாதமல்ல; அவ்விதம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் பிரித்தளிக்கப்படும் காலம் வந்தே தீரும்; அதற்காக அரசியல் சட்டம் திருத்தப்படுவதுதான் முறையானதாகும்.

"அரசியல் சட்டத் திருத்தங்கள் இப்போதும் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன; 'திருத்தவே கூடாது' என்று கூறிட அவை ஒன்றும் வேதங்கள் அல்ல — வேதங்களையே திருத்தியிருக்கிறார்கள்; ஆகவே, மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் வேண்டும் என்ற உன்னதக் கொள்கைக்காக அரசியல் சட்டம் திருத்தப்படுவது பாவமல்ல!

"இப்போது மத்திய அரசு பாகிஸ்தான் போர் மிரட்டல் பிரச்சினையினாலும்—வங்காள அகதிகள் பிரச்சினையினாலும் திணறிக் கொண்டிருக்கையில், 'நாம் ஒரு சிக்கலைத் தோற்றுவிக்க வேண்டாம்' என்றுதான் மாநில சுயாட்சிப் போராட்டத்தை ஒத்தி வைத்திருக்கிறோம்!

"ஒத்திவைத்திருக்கிறோம்" என்றாலும், மாநில சுயாட்சியின் கொள்கைகளை விளக்கிப் பிரச்சாரம் செய்வோம்!

"மாநில சுயாட்சி, அண்ணா அவர்கள் நமக்கு எழுதிவைத்த உயில்—சாசனம்! அந்த இலட்சியத்திற்காக நடக்கும் போராட்டத்திற்குக் குறுக்கே யார் நின்றாலும்—எவ்வளவு பெரிய மனிதர் நின்றாலும், தி. மு. கழகமும்—தமிழரசுக் கழகம் போன்ற தோழமைக் கட்சிகளும் கவலைப்படமாட்டா!

"அந்தப் போராட்டத்திற்குக் குறுக்கே எங்கள் பதவிகள் தடையாக இருக்குமென்றால், அவற்றைத் தூக்கி எறிந்துவிட்டு போராடத் தயாராக இருக்கிறோம்! அதுதான் எங்களை ஆளாக்கிய அண்ணனுக்கு நாங்கள் ஆற்றும் கடமை—நன்றிக் கடன்!"—என்று முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் பதில் தந்திருப்பது போதுமானதாக இருக்கும் என்றே நம்புகிறோம்.

## சூள் எடுப்போம்!

சென்ற கிழமை 17-ஆம் நாள், தமிழகத்தின் தன்மானத்தைக் காத்துத் தந்த தகைமையாளராம் பெரியார் அவர்களுக்கு 92-ஆம் அகவை நிறைவும், 93-ஆம் அகவை துவக்கமும் ஆகி, அதனைப் பெருவிழாவாகக் கொண்டாடிக் களித்திருக்கிறது தமிழகம்

பெரியார் ஈ. வெ. ரா. அவர்களது பிறந்த நாள் பெரு விழா, தமிழகத்தில் பல்லாண்டுக் காலமாகவே கொண்டாடப்பட்டு வருகின்றதென்றாலும், இந்த ஆண்டு மிகவும் முக்கியத்துவ முடையதாக இருக்கிறது.

நாட்டின் பொதுச் சூழ்நிலையில் தமிழ் இனத்தின் தன் மானத்தை விலை கோரும் ஒரு சக்தி என்றுமில்லாத அளவுக்கு, என்றுமில்லாத வேகத்தில் இன்று தலை விரித்தாடிக் கொண்டிருக்கிறது, நேர்முகமாகவும், மறைமுகமாகவும்.

தமிழையும். தமிழர்களையும் அறைகூவல் விடுத்து ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருக்கும் அந்தச் சக்தியின் ஆணிவேரையே அசைத்து, வெட்டி விட்டவர் பெரியார் அவர்கள்தான். என்றாலும் இடைக்காலத்தில் "யாவரும் கேளிர்" என்ற பொதுத் தனமைக்கு அளவுக்கும் அதிகமாக இடமளித்துவிட்ட காரணத்தால், அந்தச் சக்தி கொஞ்சம் உயிர் பெற்று, எட்டிப் பார்க்க முனைந்திருக்கிறது.

எனவே, மீண்டும் அந்தச் சக்தியின் பிடரியைப் பிடித்துக் குலுக்கும் தன்மானம் தமிழரிடையே தலையெடுக்கச் செய்ய வேண்டுமானால், பெரியார் அவர்களது தொண்டும், சேவையும் பேரளவுக்கு பரப்பப்பட வேண்டும்.

அவ்வாறு பரப்பப்பட தூண்டுகோளாக அமைந்திருக்கிறது இந்த ஆண்டு பெரியார் பிறந்த நாள் விழா.

விழாவில் கலந்து சிறப்புச் செய்வதுடன் அமையாது மான் மானத் தமிழகத்தின் மாண்புயர்த்தவும் தமிழர்கள் சூள் எடுத்துச் செயல்பட வேண்டும்.

# அற்புதமான பொற்குவியல் அழைக்கிறது உங்களை!



# ரூ. 10 லட்சம் பெறுவீர்

| (பொதுவாக எல்லா வரிசைகளுக்கும்) சிறப்புப் பரிசுகள் | | (ஒவ்வொரு வரிசைக்கும்) சாதாரணப் பரிசுகள் | |
|---|---|---|---|
| முதல் சிறப்புப் பரிசு ஒன்று | ரூ. 10,00,000 | நான்காவது பரிசுகள் ஐந்து ஒவ்வொன்றும் ரூ. 10,000 | ரூ. 50,000 |
| இரண்டாவது சிறப்புப் பரிசு ஒன்று | ரூ. 2,00,000 | ஐந்தாவது பரிசுகள் பத்து ஒவ்வொன்றும் ரூ. 5,000 | ரூ. 50,000 |
| மூன்றாவது சிறப்புப் பரிசு ஒன்று | ரூ. 1,00,000 | ஆறாவது பரிசுகள் ஐம்பது ஒவ்வொன்றும் ரூ. 1,000 | ரூ. 50,000 |
| | | ஏழாவது பரிசுகள் ஆயிரம் ஒவ்வொன்றும் ரூ. 100 | ரூ. 1,00,000 |
| | ரூ. 13,00,000 | | ரூ. 2,50,000 |

*இதுவரை தமிழ்நாடு பரிசுச் சீட்டால் உருவாகியுள்ள லட்சாதிபதிகள் 253*

**மொத்தப் பரிசுகள்: 10653**

**மொத்தப் பரிசுத் தொகை:**

# ரூ. 38,00,000

**குலுக்கல் நாள்: 11-10-1971**

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1 - தான்

செலவு ஒரு ரூபாய்




வரவோ பல லட்ச ரூபாய்

## இன்றே வாங்குங்கள்
# தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

வெளியீடு: இயக்குநர், செய்தி, விளம்பரத் துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9
கூடுதல் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2.
பரிசுகள் வெளியீட்டுக்கு உட்பட்டது



# கருப்பண்ணசாமி யோசிக்கிறார்!

மணி ஒலித்தது !

கதவு திறக்கும் சத்தம் கேட்டது.

கருப்பண்ணசாமி அலறியபடி உள்ளே ஓடலானார், ஒளிந்து கொள்ள இடம் தேடினார்.

'களுக்'கென ஓர் சிரிப்பொலி கேட்டது. கருப்பண்ணசாமி, கோபம்கொண்டு, "வேதனைப்படுகிறேன் நான் — இந்த வேளையில் கேலி வேறு செய்கிறாயா?" என்று கேட்டார், சிரித்தபடி தன் எதிரே வந்த தேவியைப் பார்த்து.

"கருப்பண்ணா! — என்ன கலக்கம்! ஏன் ஓடுகிறாய், ஒளிகிறாய்" — என்று தேவி கேட்க, கருப்பண்ணசாமி "காதிலே விழவில்லையா, மணிச் சத்தம்" என்று கேட்டார்.

"விழுந்தது—அதுகேட்டு அச்சம் ஏன் வரவேண்டும்—ஆச்சரியமாக இருக்கிறதே"—என்று தேவி கேட்டார்.

"உனக்கு ஒன்றும் புரியவில்லை. யாரோ பக்தர்களல்லவா வருகிறார்கள்...!" என்று பயத்துடன் பேசினார் கருப்பண்ணர்.

"பைத்யமே! பக்தர் வருகிறார் என்றால் பயம் ஏன் வரவேண்டும்? உன்னைத் தொழ, சூடம்கொளுத்த சோடோபசாரம் செய்ய, படையல் போட வருகிறார்கள் பக்தர்கள். இதற்கு ஏன் பயப்படவேண்டும்... ஓஹோ! இவ்வளவு பூஜையை ஏற்றுக்கொண்டும் எங்கள் கஷ்டத்தைப் போக்காமலிருக்கிறாயே கருப்பண்ணசாமி—என்று அந்த பக்தர்கள் கோபித்துக் கொள்வார்கள் என்ற பயமா?" என்றார் தேவி.

கருப்பண்ணர், "போதும் தேவி உன் தொல்லை. வரம் தந்து அவர்களின் குறையைப் போக்கவில்லை என்பதற்காக என்மீது சீறுவார்கள் என்ற பயம் எனக்கு இல்லை—நானென்ன தேவாலய அரசு செலுத்தி அனுபவமில்லாதவனா... இங்கு இல்லாவிட்டால், மேலுல

அண்ணாதுரை

கில் என்னைப் பூஜித்தபலன் கிடைக்கும் என்று பக்தர்கள் எண்ணிக் கொள்வார்கள், இங்கே அவர்களுக்குள்ள குறையைத் தீர்த்து வைக்காததற்காக என் மீது சீறமாட்டார்கள் என்ற சித்தாந்தம் எனக்கும் தெரியும். நான் பயப்பட்டது அதனால் அல்ல" என்று பெருமூச்சு வருமளவு வேகமாகப் பேசினார் கருப்பண்ணசாமி.

தேவியார் வேகமாகச் சென்று, வாயிலில் பார்த்துவிட்டு வந்து, "கருப்பண்ணா! பக்தர் யாருமல்ல, காற்று பலமாக அடித்ததால் மணி ஓசை கேட்டது. பயப்படாதே, சரி, பக்தர்கள் வருகிறார்கள் என்றால் ஏன் பயம் உண்டாகிறது உனக்கு—அதைச் சொல்லு" என்று கேட்டார்கள்—பக்தர் யாரும் வரவில்லை என்று தெரிந்ததால் தைரியம் பெற்று, தன் பீடத்தில் அமர்ந்து, எதிரே ஒரு பீடத்தில் அமர்ந்த தேவியிடம் கருப்பண்ணசாமி விளக்கம் கூறலானார்.

"தேவி! பக்தர்களால் எனக்கு ஏற்பட்ட ஆபத்தும், சங்கடமும், உனக்கு என்ன தெரியும்! வரவர இந்த 'வேலை'யிலேயே எனக்கு வெறுப்பு வளர்ந்து கொண்டு வருகிறது. தான் செய்த மோசத்தை அரைப் பலம் கற்பூரப் புகையிலே மறைத்துவிடலாம் என்று எண்ணுகிறான். அதற்கு நான் உடந்தையாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறான். இவனுடைய பேராசைக்கு நான் துணைசெய்ய வேண்டும் என்று எண்ணுகிறான்—காரணம் கேட்டால் பெரிய படையலிட்டிருக்கிறேன் என்று கூறுகிறான்."

தேவி குறுக்கிட்டு, "இதென்ன புது விஷயமா கருப்பண்ணரே! இப்படிப்பட்ட பக்தர்களை நாம் நெடுங்காலமாகப் பார்த்து, பழகிக்கொண்டுதானே வந்திருக்கிறோம்" என்று கூறிட, கருப்பண்ணசாமி, மனக் கொதிப்புடன், "இப்போது பக்தர்கள் அந்த அளவோடு நின்றுவிடவில்லை தேவி—கேவலப்படுத்துகிறார்கள், போலீசின் பாதுகாப்பிலே வாழவேண்டிய நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்னை" என்று கூறினார்.

"கேவலப் படுத்தினார்களா! யார்!" என்று தேவி, ஆச்சரியத்துடன் கேட்டார்.

அவரைக் கேலி செய்வதுபோல கருப்பண்ணர், "யார்!"—என்று ஒருமுறை கூறிவிட்டு, "நாஸ்தீகர்கள் கேவலப்படுத்தினார்கள் என்று கருதுகிறீரா தேவி! அவர்களல்ல. அவர்கள் மனிதருடன் பழகுவதும் மனிதர்களின் பிரச்னைகளைக் கவனிப்பதுமாகக் காலந் தள்ளுகிறார்கள். என்னைக் கேவலப்படுத்தியது பக்தர்கள்!—கைகூப்பித் தொழுது, கன்னத்தில் போட்டுக்கொள்கிறார்

---

4—2—51-இல் மட்டுமல்ல; இன்றைக்கும் கிராமப் புறங்களில் இந்தக் கோலம் நடைபெற்றுக் கொண்டுதானிருக்கிறது. என்றுதான் அறிவு வருமோ, அறியாமை அகலுமோ !

---

களே, கற்பூரம் கொளுத்துகிறார்களே, அந்த பக்தர்கள்தான், என்னை, செச்சே! இப்போது எண்ணிக் கொண்டாலும் எனக்கே வெட்கமாக இருக்கிறது, கேவலப் படுத்தினார்கள்-போலீசாரின் துணையால் நான் மீட்கப் பட்டேன்'' என்று கூறினார். தேவிக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை.

''கருப்பண்ணரே என்ன பேசுகிறீர். பக்தர்கள்—போலீஸ்—ஒன்றுக்கொன்று சம்பந்த மில்லாத பேச்சாக இருக்கிறதே'' என்றார்.

''தேவி, கேள் இந்த விஷயத்தை. இந்த பக்தர்களை இன்னின்னது செய்யுங்கள் என் மன மகிழ்ச்சிக்காக, இன்னின்னது படையுங்கள் என்று நான் கேட்டதுமில்லை — அவர்களாகவே வருகிறார்கள்— அவரவர்கள் மனதுக்குத் தோன்றியபடி ஏதேதோ செய்கிறார்கள். நான் சிவனே! என்று எல்லாவற்றுக்கும் ஈடு கொடுத்துக்கொண்டிருக்கிறேன். என் பொறுமை, பெருந்தன்மை, இவைகளைக் கண்டு இந்த பக்தர்கள், என்னை என்ன வேண்டு மானாலும் செய்யலாம் என்ற துணிவு கொண்டு,.........'' கருப்பண்ணரின் தொண்டை அடைத்துக் கொண்டது துக்கத்தால். தேவியின் ஆச்சரியம் அதிகரித்தது. ''துணிவுகொண்டு...... சொல்லும் கருப்பண்ணரே! துணிவுகொண்டு...'' என்றுஆவலை வார்த்தைகளாக்கினார் தேவி. ஆத்திரத்துடன் கூறினார் கருப்பண்ண சாமி, ''ஒரு அறையிலே போட்டு பூட்டி விட்டார்கள்!''—என்றார். தேவிக்கும் இலேசாகத் திகில் ஏற்பட்டது.

''பூட்டி விட்டார்களா? உன்னையா? பக்தர்களா?'' — என்று திகைப்புடன் தேவி கேட்டார்கள்.

''கேட்பதற்கே இவ்வளவு திகில் பிறக்கிறதே தேவியாரே! என் மனம் என்ன பாடுபட்டிருக்கும், ஒரு அறையிலே போட்டு பூட்டின போது, நான் என்ன கழனிவேலை செய்யும் கருப்பண்ணனா, சாமி—சாமி-விட்டுவிடுங்க-என்று கதற! நானோ அவர்கள் கும்பிட்டு வரங் கேட்கும் கருப்பண்ண ஸ்வாமி! அவர்களோ என்னையே அறையிலே தள்ளிப் பூட்டுப் போட்டுவிட்டார்கள். நான் என்ன செய்வது!''— என்று கூறி, ஆயாச மடைந்தார் கருப்பண்ணசாமி.

தேவி, உண்மையிலேயே அனுதாபப்படத் தொடங்கினார்கள்.

''கேவலமான நிலைமைதான் இது. பக்தர்கள், உன்னைச் சிறையில் போடுவது போல அல்லவா செய்து விட்டிருக்கிறார்கள்'' என்று பேசினார் சோகமாக.

''தேவி! உன் காதிலே, அவர்கள் அப்போது போட்ட கூச்சல் விழுந்திருந்தால் தெரிந்திருக்கும் அவர்களின் போக்கும் குணமும். போட்டுப் பூட்டடா, என்ன நடந்துவிடுதுன்னு பார்க்கலாம்'' என்று ஒருவன் கொக்கரிக்கிறான்.

''பெரிய பூட்டு கொண்டு வா'' என்று கூவுகிறான் ஒருவன்.

''அலிகார் பூட்டு வேண்டுமா'' என்று கேட்கிறான் இன்னொருவன். இவ்வளவு கூச்சல், துணிவு! போட்டுப் பூட்டுங்க, பார்க்கலாம், எவன் வந்து என்ன செய்துவிடுகிறான்...'' என்று கூவி, தேவி! என்னை ஒரு பெரிய அறையிலேபோட்டுப் பூட்டி விட்டுப் போயேவிட்டார்கள்.

வெளியே சிரிக்கிறார்கள்—இனி பார்க்கலாம் என்ன நடக்கிறது என்று!—நான் உள்ளே அடைபட்டுக் கிடக்கிறேன்-என்னைப்போட்டு பூட்டிய 'பாவிகள்' சிரிக்கிறார்கள்! நான் கேட்கலாமா அவர்களைப் பார்த்து, இதென்ன அக்ரமம்—திறந்துவிடுங்கள் என்னை — இல்லையானால் மூக்கிலும் வாயிலும் இரத்தம் வரச்செய்வேன் கைகால்களை முறித்துப் போட்டு விடுவேன்''— என்று பேசலாமா! அவர்களோ பக்தர்கள்! நானோ அவர்களால் வணங்கப்படும் சாமி! தேவி! மனம் எவ்வளவு பதறி இருக்குமென்று யோசியுங்கள்'' — என்றார் கருப்பண்ணர்.

''கருப்பண்ணரே! அது கிடக்கட்டும், ஏன் பூட்டினார்கள்......என்ன செய்தீர்?''-என்று கேட்டார் தேவியார். கருப்பண்ணர் சிரித்துவிட்டு, ''நானா, என்ன செய்தேனா, அவர்கள் என் எதிரே இருந்துகொண்டு சொல்லிவந்த புளுகுகளை எல்லாம் கேட்டுச் சகித்துக் கொண்டிருந்தேனே, அதுதான் நான் செய்த தவறு. போதும் புளுகாதீர்கள் என்று ஒரு தடவையாவது ஒரு பக்தனையாவது கண்டித்திருந்தால் அவர்களுக்கு அன்று அவ்வளவு துணிவு வந்திருக்காது'' என்றார் கருப்பண்ணர்.

''உன்னை ஒரு தனி இடத்தில் போட்டுப் பூட்டவேண்டிய அவசியம் என்ன வந்தது'' என்று மீண்டும் கேட்டார் தேவியார்.

சலிப்பும் வெறுப்பும் கலந்த குரலிலே கருப்பண்ணர் சொன்னார்:

''ஏன் பூட்டி வைத்தார்கள் என்று கேட்கிறீர், தேவி! நான் அவர்களின் ''சாமி''யாம், அதனாலே என்னை வேறே சில பக்தர்கள் கொண்டுபோகாமலிருப்பதற்காக, என்னைப் போட்டு பூட்டிவைத்தார்கள். அவ்வளவு 'பக்தி' என்னிடம், வேறு எந்த பக்தனிடமும் நான் பேசிவிடக்கூடாது. அப்படி ஒரு எண்ணம்——'' என்றார் கருப்பண்ணர்.

''இதென்ன பைத்யக்காரத்தனமான எண்ணம்!''—என்று தேவி கேலியாகப் பேசினார்கள். ''இவர்கள் கண்டதையும் கடியதையும் வேகாததையும் பழுக்காததையும் தின்று வயிற்றுப் போக்கு ஏற்பட்டால், என்னை வந்து கேட்கிறார்களே, தேவி! கருப்பண்ணஸ்வாமீ! என்னைக் காப்பாற்றுன்னு. பைத்யக்காரத்தனம்தானே அது. அது போல இதுவும் ஒரு பைத்யக்காரத்தனம். உண்மையைச் சொல்லப் போனா, தேவி! அப்படிப்பட்ட பைத்யக்காரத்தனத்தையும் நாம் வளர விட்டது தவறு இல்லையா? என் விஷயத்தைக் கேள், தேவி! இந்தப் பக்தர்களுக்கு, நான் தங்களுடைய ''சாமி'', வேறு யாரும், தங்களுடையதுன்னு 'பாத்யதை' கொண்டாடினாலும் விட்டுக் கொடுக்கக் கூடாது என்ற எண்ணம் ஏற்பட்டது. அதற்கு தகுந்தபடியான நிலைமையும்ஏற்பட்டுவிட்டது. நான், நீ, என்று போட்டிபோட்டுக்கொண்டு பக்தர்கள் கூட்டம் பெருகுவது கண்டு எனக்கும் பெருமையாகத் தான் இருந்தது. என் போறாத வேளை, என் பக்த கோடிகள், இரண்டு 'கோஷ்டி'யாகப் பிரிந்து அவர்களுக்குள்ளே தீராத பகை ஏற்பட்டுவிட்டது. அவர்களுடைய பகை எனக்குப் பெரிய ஆபத்தாக வந்து சேரும் என்று நான் கண்டேனா—நான் என் வேலையைக் கவனித்துக் கொண்டு இருந்தேன். வழக்கமாக எனக்கு நடத்துகிற உற்சவத்தை நடத்தினார்கள்— எனக்கு மகிழ்ச்சி —தேரும் திருவிழாவும் வீண் வேலை என்று ஊரூருக்கும் போய்ச் சிலபேர் பேசிக்கொண்டிருக்கிறார்களே, அவர்கள் பேச்சிலே மயங்கி, எங்கே என் பக்தர்கள் இந்த வருஷம் உற்சவத்தை நடத்தாமல் இருந்து விடுகிறார்களோ என்று எனக்கு இலேசாகப் பயம். அவர்கள் உற்சவத்தை வழக்கப்படி நடத்த முன்வரவே நான் மகிழ்ச்சி அடைந்தேன்—எவ்வளவு பிரசாரம் நடைபெற்றாலும் நமது செல்வாக்கு போய்விடவில்லை

என்று எண்ணி பூரித்துப்போனேன். வருஷா வருஷம் வைகாசி மாதம் உற்சவம் நடத்துவார்கள் எனக்கு —கருப்ப உடையார் தலைவர், உற்சவம் நடத்திய பக்தர்குழாத்துக்கு. வழக்கப்படி ஊர்வலமாக என்னை அழைத்துச் சென்றார்கள். "பயல்களே! பகுத்தறிவு—சுயமரியாதை என்று கத்திக்கொண் டிருக்கிறீர்களே—பாருங்களடா, பக்தர்கள் எனக்கு உற்சவம் கொண்டாடுவதை!" என்று கூறிட எண்ணினேன்—ஆனால் அந்தப் பயல்கள் ஒருவன் கூடக் காணோம்—எங்காவது 'மஹாநாடு' போட்டிருப்பான்கள் போலிருக்கு. சந்தோஷமாகப் பவனி வந்தேன். எப்போதும்போல என்னைக் கொண்டுபோய் மண்டபத்தில் கொலுவிருக்கச் செய்தார்கள். பக்தர்கள் என்னை வந்து தரிசிக்க அதுதானே நல்ல ஏற்பாடு. நானும் மண்டபத்தில் கெம்பீரமாக வீற்றிருந்தேன்.

பக்தகோடிகள் இரண்டு 'கோஷ்டி'யாகி இருந்தனர் என்று சொன்னேனல்லவா-உற்சவம் செய்தது ஒரு கோஷ்டி-கருப்ப உடையார் கோஷ்டி-மற்றொரு கோஷ்டி, பிச்ச உடையார் நடத்தி வந்தார்-அந்தக் கோஷ்டியும் என் பக்தர்கள் தான். அந்த இரண்டு 'கோஷ்டிக்' கும்தான் பகை. இரண்டு கோஷ்டிக்கும் என்னிடம் பகை ஏற்படக் காரணமே கிடையாது.

மண்டபத்தில் இருந்த என்னை மீண்டும் கோயிலுக்கு அழைத்துப் போகக் கூடிற்று கருப்ப பக்தர் கோஷ்டி.

"தூங்காதே! எடுக்காதே!" என்று கூவிற்று பிச்ச பக்தர் கோஷ்டி.

"நீங்கள் யாரடா, தடுக்க—எங்க கருப்பண்ணசாமிக்கு நாங்கள் உற்சவம் நடத்துகிறோம் — எங்கள் இஷ்டப்படி — நடத்துகிறோம் — உலா முடிந்தது, கொலு முடிந்தது —கொண்டு போகிறோம் கோயிலுக்கு — நீங்கள் யார் தடுக்க?" என்று கருப்ப பக்தர் கோஷ்டி பதில் கூறிற்று.

"தொடாதே!" — என்று அதட்டிப் பேசினர் பிச்ச பக்தர் கூட்டத்தினர்.

"தூக்கு! தூக்குடா!" என்று அதிகாரக் குரலில் பேசினர் கருப்ப பக்த கோஷ்டியினர்.

"வெளியே கிளப்பினே—கொலை விழும்—ஆமாம்—"

"சூரப் புலிகளோ! தூக்குடா சாமியை!"

"வேண்டாம்—வீணு தொல்லைப் படாதிங்க"

"கருப்பண்ணசாமியை நாங்க எங்க இஷ்டப்படி தூக்கிக்கிட்டுப் போவோம்."

"கருப்பண்ணசாமி, எங்க சாமிடா!"

"இல்லே, எங்க சாமிடா, கருப்பண்ணசாமி"

"கையை வெட்டிவிடுவேன்."

"காலை ஒடித்துவிடுவோம்."

தேவி! இரு பிரிவும் இப்படி கொக்கரித்தன—நான் மண்டபத்திலே கொலு இருக்கிறேன்! என்னைக் கொண்டுபோய் பழையபடி கோயிலில் சேர்த்துவிட வேண்டும் என்று ஒரு பிரிவு முயற்சி செய்கிறது—இன்னொரு பிரிவு, கூடாது என்று கூறித் தடுக்கிறது. நான் என்ன செய்வது! இரு பிரிவினரும் என் பக்தர்கள்! நான், யார் பக்கம் சேரமுடியும்? இரண்டு பிரிவும் சண்டை போட்டுக் கொள்ளட்டும், நாம், கோயிலுக்குப் போய்த் தொலைப்போம் — இரு பிரிவின் தயவும் வேண்டாம், என்று எண்ணம் பிறந்தது—ஆனால் எப்படிக்

வண்ணமிகு படைப்புகள், வர்ணமய உலகம்.
அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம். பட்டுகள் பிரமாதம்.
நெசவோ நெஞ்சையள்ளும். குர்தாக்கள், பெல் பாட்டம்கள்,
லுங்கிகள், சேலைகள்! உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்!!

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்.

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற வர்ணஜால ஆடைகள்...
கோ-ஆப்டெக்ஸ் சகாயமான விலை...
ஆதாயமான உழைப்பு.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
பாலசுந்தரம் பில்டிங்ஸ்,
எழும்பூர், :: சென்னை - 8.

கோயிலுக்குப் போவது! நான் திண்டாடிப் போனேன், தேவி! திகைத்துப் போனேன்.

பட்டிக் காடுகளிலே, கலியாணத் தகராறு கிளம்பிவிட்டால், பெண்ணைக் கொண்டுவா என்று ஒரு கூட்டம் கூவ, பெண்ணைக் கொண்டு போகாதே என்று மற்றொரு கூட்டம் கூவ, இரண்டு கூட்டத்தின் சச்சரவிலே சிக்கிய பெண், புலம்புவது உண்டு. என் நிலை அதுபோலாகி விட்டது. ஆனால் நான் புலம்பலாமா! நானோ சாமி! என்னை இந்தக் கொடுமைக்கு ஆளாக்கினவர்களோ என்னைப் பூஜிக்கும் பக்தர்கள்! என்ன செய்வது நான்!

"கோயிலிலே கொண்டுபோய் ஸ்வாமியைச் சேர்ப்பது தான் நியாயம்" என்று கருப்ப பக்தர் குழாம் கூறியபடி இருந்தது. பிச்சை பக்தர் குழாமோ, "விவகாரத்தைத் தீர்த்துவிட்டு, சாமியைத் தொடு—விவகாரம் பைசல் ஆகாததற்கு முன்னே, தொட்டா, விடமாட்டோம்" என்று கூறுகிறது.

"அட, பாவிகளா! உங்களுக்குள்ளே, ஏதாவது விவகாரம் இருந்தா என்னை ஏன் அதுக்காகச் சீரழிவு செய்கிறீங்க. நான் கோயிலுக்குப் போன பிறகு, உங்க விவகாரத்தைபேசி, பைசல் செய்து கொள்ளக் கூடாதா? என்னை இப்படி அவமானப்படுத்துவது முறையா-என்று கேட்க விருப்பம் தான்—எப்படிக் கேட்க முடியும்!

ஊரிலே இதற்குள்ளே பேசப்பட்ட பேச்சோ, கேட்டுச் சகிக்க முடியல்லே.

"சாமி புறப்படலே இன்னும்?"

"இல்லே — சாமியைவிட மாட்டேன்னு சொல்றுங்களாம்."

"ஏனும்—யாராம்—"

"அவுங்கதான் பிச்சய்யா"

"ஏனும்"

"என்னமோ விவகாரம் இருக்காம், கருப்பையாவோடே அந்த விவகாரத்தைப் பைசல் செய்து சாமியைத் தொடு இல்லேன்னு விடமாட்டோம்னு பேசறுங்க"

"சாமி, மண்டபத்திலே தான் இருக்கா?"

"ஆமாம்—பாவம்—மண்டபத்திலேயே தான் இருக்கு"

"இந்நேரம் கோயில் போய்ச் சேர்ந்திருக்குமே."

"ஆமாம், விட்டாத்தானே"

"இவர்களுக்குள்ளே சண்டைன்னு சாமி, என்ன பண்ணிச்சாம், பாவம், அதை மண்டபத்திலே காக்கப் போட்டு வைக்க வேணுமா!"

இப்படித் தாய்மார்கள் பேசுகிறார்கள்.

சிறுவர்களோ, "டோய்! சாமி ஆப்பிட்டுக்கிச்சி, மண்டவத்திலே" என்று கூவித் தொலைக்கிறார்கள்.

தேவி! கோயில் நிர்வாக சம்பந்தமாக, அந்த இரண்டு பிரிவுக்குள் ஏதோ தகராறும் — அதற்காக என்னை இந்தக் கோலப் படுத்தினார்கள்.

கோயில் தகராறு தீர்க்கப்பட்டாலொழிய, என்னை மண்டபத்தை விட்டு எடுத்துச் செல்லக் கூடாது என்று கண்டிப்பாகக் கூறிவிட்டதுடன், "கணக்கு வழக்கு முடிந்தாலொழிய கருப்பண்ணசாமியைக் கோயிலுக்குக் கொண்டு போக விடப் போவதில்லை" என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டு, தேவி! என்னை மண்டபத்துக்குள்ளே விட்டு விட்டு, கதவை இழுத்துப் பூட்டிக்கொண்டு போய்விட்டார்கள், பிச்ச பக்தக் கூட்டம். நான் உள்ளே அடைபட்டுக் கிடந்தேன் —மண்டபத்தைப் பூட்டிவிட்டார்கள். உற்சவத்துக்கு ஆசைப்படாமலிருந்தால், நிம்மதியாகக் கோயிலிலே இருந்திருக்கலாம் — இப்போது, மண்டபத்திலே போட்டு பூட்டிவிட்டார்கள்.

"டோய்! சாமி உள்ளே இருக்குடா-பூட்டிப் பூட்டாங்க" என்று கூவிக் குதிக்கிறார்கள்.

"பாவம், கருப்பண்ணசாமியைப் போட்டு பூட்டி விட்டான்க!" என்று தாய்மார்கள் முகவாய்க் கட்டையில் கை வைத்தபடி பேசுகிறார்கள். நான் உள்ளே சிறை வைக்கப்பட்டேன். என்னை இந்தச் சதிக்கு ஆளாக்கிய கருப்ப பக்தர், என்னைச் சிறைமீட்க அரும்பாடு படலானார், 'இந்துமத பரிபாலன போர்டாரா'மே அவர்களிடம் முறையிட்டாராம்.

"சாமியை மண்டபத்திலே போட்டு பூட்டிவிட்டார்கள்-கோயிலிலே சாமி இல்லை — சாமியை வெளியே கொண்டுவந்து கொடுக்க வேணும்"னு கேட்டாராம். போர்டார் இதுக்கா இருக்காங்க! ஏதோ கணக்கு வழக்கு சரியா இருக்கா இல்லையான்னு பார்க்கத்தானே— அந்தக் காரியத்தை ஒழுங்காச் செய்யவே அவர்களுக்கு நேரம் போதறதில்லே —என்னைப் போட்டு பூட்டிவிட்டா, அதற்காக ஓடோடியா வருவாங்க! போப்பா! போயி 'போலீசிலே சொல்லுன்னு யோசனை கூறிவிட்டாங்க. ஓடியிருக்கிறார் போலீசுக்கு. நான் உள்ளே அடைபட்டுக் கிடக்கிறேன். போலீசிலே என்னென்ன பேசினாங்களோ தெரியல்லே!என்ன பேசியிருக்கப் போறாங்க, கேலிதான்! கடைசியிலே லால்குடி போலீஸ்சப்-இன்ஸ்பெக்டர் ஒரு போலீஸ் படையோடு வந்து, பூட்டை உடைத்து, என்னை வெளியே விட்டார்! அந்த, நல்ல மனுஷன் இந்த உபகாரம் செய்ய வந்தாரே, அவரைச் சும்மா விட்டாங்களா, 'எப்படி பூட்டை உடைக்கலாம் - பார், என்ன செய்கிறோம்-எங்ககருப்பண்ணசாமியை நாங்க பூட்டிவைக்கிறோம் மாட்டிவைக்கிறோம் எங்க இஷ்டப்படிச் செய்கிறோம், நீ யார் கேட்க — பூட்டை உடைக்கலாமா?" அப்படி இப்படின்னு, அவரைச் சூழ்ந்து கொண்டாங்க. அவர் என்ன, என்னைப் போலவா, வாயை மூடிக்கிட்டுக் கிடப்பாரு — மரியாதையா நடங்க — சட்டப்படி நடக்கவேணும்னு சொல்லியிருக்காரு—கேட்கல்லே, போலீசாரைக் கூப்பிட்டாரு, போடுங்கடா பூசைன்னு உத்திரவு போட்டாரு, தூக்கினாங்க தடியை, அடிச்சி விரட்டினாங்க. தேவீ! அப்பத்தான் என் மனம் கொஞ்சம் நிம்மதியாச்சி. பக்தனுங்கன்னு பேர் வைத்துக்கொண்டு, என் எதிரே கன்னம் கன்னம்னு போட்டுக் கொண்டு, கற்பூரம் கொளுத்திக் காட்டிக்கிட்டு, இருக்கிறவங்க, நீதி நியாயத்தைக் கவனிக்காமல், ஈவு இரக்கம் காட்டாமல், பழி பாவத்துக்கு அஞ்சாமல், சாமியை இந்த அலங்கோலப் படுத்தலாமான்னு யோசிக்காமே, நெஞ்சமுத்தத் தோட, என்னைப் பூட்டிப் போட்டு விட்டாங்க — கேவலப்படுத்திவிட்டாங்க. நான் என்ன செய்ய முடிந்தது? எந்தப் புண்யவான் வந்து வெளியே விடுவாரோ—எத்தனை காலம் இங்கே அடை பட்டுக் கிடக்க வேணுமோ — எவனவன் கேலி செய்கிறானோ—ன்னு எண்ணி எண்ணி ஏக்கப்பட்டுக் கொண்டிருந்தேன். நல்ல வேளையா லால்குடிக்காரர், தங்கமான மனுஷன், அவர் புள்ளெ குட்டிக சுகமா இருக்கவேணும், என்னை வந்து வெளியே கொண்டு வந்து சேர்த்

(14-ஆம் பக்கம் பார்க்க)

# மனோன்மணீய வாழ்த்தில் மறுவா.....

புலவர் கோ. அண்ணாமலை

'மனோன்மணீய வாழ்த்தில் மறு' என்று மஞ்சரி (ஆவணி '71) ஏட்டில் ஒரு கல்லூரித் தமிழாசிரியர் எழுதியிருக்கின்றார். 'ஆரியம் போல் உலக வழக் கழிந்தொழிந்து சிதையாவுன் சீரிளமைத் திறம்' என்று தமிழ்த் தாயின் திறத்தைப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் வியந்தது குற்றம் என்பது மஞ்சரி கட்டுரையாளரின் வாதம்.

நம்மொழி நமக்கு எப்படி உயர்ந்ததோ அப்படியே ஆரிய மொழியினர்க்கு அவர் மொழி உயர்ந்ததல்லவா என்பது அவர் கேள்வி. வாழ்த்தில் பிறர் மொழியைப் பழிப்பதா என்று கேட்கின்றார்.

கட்டுரையாளர் வேறு யாராகவோ இருந்திருந்தால் நாம் வியப்படைய ஒன்றுமே இருந்திருக்காது, அவர் ஒரு தமிழாசிரியர்; அதுவும் கல்லூரியில்! அவர் கட்டுரையைப் படித்தவுடன் நம் உள்ளத்தில் இயல்பாக எழுந்துவிட்ட வினாவே இதுதான்: "இவர்உண்மையாகவே தமிழாசிரியர்தானா? அதுவும் கல்லூரியிலா?"

மனோன்மணியத் தமிழ்த் தாய் வாழ்த்தில் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் தமிழின் பெருமையைச் சொல்கிறார். அப்போது தமிழோடு ஒப்பு நோக்கத்தக்க ஒரு மொழியின் இயற்கையான தன்மையை ஒப்புமை காட்டுகிறார். அவ்வளவே. இதனைக் கட்டுரையாளரே ஒரு இடத்தில் குறிப்பிடுகிறார். சுந்தரம் பிள்ளை உண்மையைச் சொல்கிறார்; இல்லாததைச் சொல்லவில்லை என்பார்கள் என் கருத்தை மறுப்பவர்கள். ஆனால் அப்படி உண்மையைச் சொல்லித்தான் ஆகவேண்டுமா? - என்கிறார். உண்மையைச் சொல்வது எப்படித் தவறாகும் என்று அவர் கட்டுரையில் விளக்கவில்லை. 'தமிழ்ப் பண்பாட்டுக்குத் தகுமா?' — என்பதே அவருடைய பெருங்கேள்வி. 'வாழ்த்தில் வசை பாடலா' — என்பது மற்றொரு வினா!

நம்முடைய மறுப்பு இதுதான்: அது வசையல்ல! எப்படி? உண்மையைச் சொல்வது வசையாகாது! திருடனைத் திருடன் என்பது பண்பாடு குறைந்த செயலும் ஆகாது! திருடன் தன்னைத் திருடன் என்று சொல்கிறார்களே என்று மனம் வருந்துவான்என்பதற்காக அவனை அவ்வாறழைக்காமல் இருங்கள் என்றும் அதுதான் பண்பாடு என்றும் சொல்வதுபோல் இருக்கிறது கட்டுரையாளரின் வாதம்!

கன்னடமும் களி தெலுங்கும் கவின் மலையாளமும் உன்னுதிரத் துதித் தெழுந்தே ஒன்று பல ஆயிடினும், ஆரியம்போல் உலக வழக் கழிந்தொழிந்து' என்கின்றார் சுந்தரம் பிள்ளை. தமிழை அதனளவுக்குப் பழமையும் பெருமையும் மிக்க வடமொழியோடு ஒப்பிட்டுக் காட்டுகிறார். தமிழ் வயிற்றில் பிறந்த மொழிக் குழந்தைகள் கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும்! இருப்பினும் இளமை மாறவில்லை தமிழ்! 'சிதைவு இல்லை! அழிவு இல்லை!' என்கின்றார். ஆரியமும் பல மொழிகள் தோன்றக் காரணமாயிருந்திருக்கிறது. பல மொழிகளின் தாய் என்ற பெருமை தமிழ் மொழியைப் போலவே ஆரியத்துக்கும் உண்டு என்பதற்காகவே அதனோடு ஒப்புமைப்படுத்தி பின்னர் அதனிலும் சிறந்தது தமிழ்— இன்ன காரணத்தால் என்கின்றார். பல மொழிகளுக்கு அன்னையாயினும் சிதைவில்லை தமிழுக்கு! ஆனால் ஆரியம் சிதைந்திருக்கிறது! 'அப்பேர்ப்பட்ட தேவ பாடைக்'கே 'உலக வழக்கு அழிதல்' என்னும் சிதைவு ஏற்பட்டுவிட்டது. ஆனால் உனக்கு அப்படி எதுவும் ஏற்படாததைக் காண நான் வியப்படைகின்றேன் என்றும், வியந்து பாராட்டி வாழ்த்துகிறேன் என்றும் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை சொல்கின்றார் என்றால் அவர் 'தேவ பாடையாகிய' ஆரியத்தை இழித்தார் - பழித்தார் — என்று பொருளாகி விடுமா?

தான் போற்றுகின்ற — பாராட்டித் தொழுகின்ற ஒன்றுக்கு இன்னொன்றை உவமை சொல்கிறான் கவிஞன் என்றால் அவ்வாறு உவமையாக எடுத்துக் கொள்ளப்படுகின்ற பொருளை அவன் கேவலப் படுத்திவிட்டான் என்பதும் பொருந்தாது; கேவலப்படுத்து

வதே கவிஞனின் உள்நோக்
என்பதும் அமையாது. ஒப்பு
கூற எடுத்துக் கொள்ளும்போ
அது பொருளோடு ஒப்ப மதிக்
படும் தன்மை வாய்ந்தது ஏ
ஒருவகையில் என்றாகிவிடும்! பி
னரே அவ்வுவமையைக் காட்
லும் பொருள் ஒருவகையில் உய
தது என்று கவிஞனால் கூறப்படு
இது அணியிலக்கணத்திலும் தெ
வுற பேசப்படும்!

'திங்களும் சான்றோரும் ஒப்
ஆனால், பாருங்கள் திங்கள் ப
வாற்றும்; சான்றோர் அஃதாற்
என்று கவிஞன் சான்றோரைப் பு
வான். அப்போது பார்த்தா
பார்த்தாயா இவனுக்குத் தி
ளைப் பழிப்பதே நோக்கம் என்
கவிஞன் மேல் பாய்வது?

"கச்சி மாநகரும் கடலும்
வேறு தன்மைகளால் ஒத்திருக்
கடலில், கச்சியில் தோன்று
எல்லாம் தோன்றா. ஆனால் க
யில், கடலின் தோன்றுவன அ
தும் தோன்றும்!"—என்றால் கவ
னுக்கு கடலை இழிப்பதுத
நோக்கம் என்பதில்லை; கச்சி
புகழவேண்டும் என்பது தா
ஆனால் அதனைப் படிக்கின்ற
வேண்டுமென்றே கவிஞன்
குறை சொல்ல வேண்டுமெ
விரும்பினால், "அதெப்படிக்
லைப் பழிக்கப் போயிற்று? கட
விரும்புகின்றவர் தம் ம
நோகுமே" என்றெல்லாம் வலி
பொருள் செய்து வல்லடி வழக்
வாதும் செய்யலாம். ஆனால்
வுடைய பெருமக்கள் எளி
உண்மை உணர்வர்.

மாட்டைப் பிடித்துக் கட
என்று சொன்னால் 'கன்றுக்
டியை அவிழ்த்து விடு' என்
பொருள்?

தமிழ்த் தாயை வாழ்த்
போது சுந்தரம் பிள்ளைக்கு ஆரி
தாயும் நினைவுக்கு வந்திருக்கி
இருவரையும் ஒப்ப மதித்திரு
பேராசிரியர் சுந்தரம் பிள்ளை
வரை உவமையாக்கினார். எப்
தும் உவமை பொருளைவிடச் ச
—ஆம் மிகச் சற்றே குறைந்
என்பதை நாம் அறிந்திருக்கிறோ
அந்த வகையில் ஆரியத் த

லக வழக்கு இல்லாமையால்
தைந்து போனமையை எண்ணி
அவளே அப்படி அழிந்து சிதைந்
ம்கூட நீ அவ்வாறு சிதையாமல்
நப்பதை அறிந்து வியக்கிறேன்,
ராட்டுகிறேன். வாழ்த்துகிறேன்
ன்கின்ருர். தேவபாடை என்றும்,
வுளுக்கு உகந்த மொழி என்
ம், வேதங்கள்தோன்றிய மொழி
ன்றும் சொல்லப்படுகின்ற அத்த
கய மொழியே உலக வழக் கழிந்
நக்க தமிழ் மொழி மட்டும் அவ்
று சிதையாமல் இருப்பதனுல்
ன் சுந்தரம் பிள்ளைக்கு வியப்பு
பட்டிருக்கிறது. இன்றேல் சீரி
மைத் திறத்தை அவர் ''வியந்து''
ராட்டக் காரணம் இன்ருூம்.
யல் மறக்க' நியாயம் இன்ருூம்.
ப்புத்தோன்றுவதற்கும் செயல்
ப்பதற்கும் காரணமே ஒரு
கையில் ஆரிய மொழியின் சிறப்
தான் என்று வாதிட்டால்
னே அறிஞர் மறுத்திடக் கார
ம் எதுவும் இல்லை என்றே நாம்
புகிருேம். மேலும் சுந்தரம்
ளைக்குத் தமிழ்த் தாயை
ழ்த்திட வேண்டும் என்பது
ன் நோக்கமே தவிர ஆரியத்
யைத் தாழ்த்திட வேண்டும்
பது நோக்கமல்ல! அவ்வாறு
க்கம் கற்பிப்பது தமிழ்ப் பண்
ப் பற்றிப் பேசும் கட்டுரை
ளருக்கும் அழகல்ல!

தமிழ்த் தாயை வாழ்த்தும்
த்தில் ஆரியத் தாயை இழுப்
னேன் என்று கேட்கின்ற கேள்
யின் உள்ளே உறங்கிக் கிடக்
ற 'பாமரத் தன்மை'யை
ற்றுப் பார்த்திட வேண்டு
ன்று கட்டுரையாளரையும் நல்
ஞர்களையும் பணிவுடன் வேண்
ருேம். அப்படியல்ல, அந்தக்
ர்விக்கு விடைதான் வேண்டும்
ருல் அது இதுதான்!

ரியம், தமிழின் அளவு
ருமை மிக்கது; பழமையானது.
ம் செறிந்தது என்பதனுலும்,
ழோடு ஆரியத்துக்கு நீண்ட
நெடுங்காலமாக உறவு உண்டு
பதனுலும் அதனோடு தமிழை
புமைப்படுத்திச் சிறப்பிக்க
ணுவதில் எத்தகைய தவறும்
லை என்பது ஒரு விடை!

ந்தரம் பிள்ளையைப் பொறுத்த
ர தமிழ்த் தாயைப் போற்றும்
து ஆரியத் தாயையும் நினைக்
தோன்றியது இயல்பாகவே
ந்த உணர்வால் இருந்திருக்கக்
ம். அதற்குக் காரணம் தேடிக்

கண்டு பிடித்துச் சொல்வது அழகன்று.

மேலும் உலக வழக் கழிந்தொழிந்த மொழிகள் உலகில் நிறைய இருக்கின்றன. ஆரியம் தவிர இலத்தீன், எபிரேயம் கிரேக்கம் போன்ற மிகப் பழம் பெருமை வாய்ந்த மொழிகள் இருக்கின்றன. இவையும் ஆரியம்போல ஏட்டு வழக்கில் இருக்கின்றனவே தவிர உலக வழக்கில் இல்லை. ஆனுல் அவற்றிற்குத் தமிழோடு தொடர்பில்லை. இவை எல்லாம் ஆரியம் போல் - தமிழைப் போல் பழம் பெருமையும் இலக்கிய வளமும் செறிந்தவையே. எனினும் இவற்றிற்குத் தமிழோடு தொடர்பில்லை —இருந்தாலும் ஆரியம் அளவுக்கு அத்துணை நெருக்கமும் அணுக்கமும் இல்லை. கூர்ந்து நோக்கிச் சொல்லுவோமேயானுல், கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துலுவும் தமிழினிடமிருந்து தோன்றின என்று சொல்லும் அளவு வடமொழியினிடமிருந்தும் அவற்றின் தோற்றத்திற்கு உதவி கிடைத்திருக்கிறது என்ருல் அது பொருத்தமுடைய கூற்றேயாகும். அந்த அளவுக்கு அந்த மொழிகளில் வடமொழிக் கலப்பு ஏற்பட்டிருக்கின்றது. தொடக்கத்தில் அவை தமிழ் மொழிச் சொற்களைக் கொண்டும் பின்னர் வடமொழிச் சொற்களின் கலப்பினைக் கொண்டும் இயங்கி வருகின்றன என்பது மொழி நூலறிஞர் ஒப்புக்கொண்டது. எனவே மற்ற மொழிகளைத் தோற்றுவித்தது தமிழ் என்பதோடு ஆரியமும் அதில் பங்கு கொண்டிருக்கிறது என்பது தெளிவு. மொழிகளைப் பெற்றெடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தும் தமிழ்போல் உலக வழக்கில் நில்லாது ஆரியம் சிதைந்தது. பல்வேறு மொழிகளைத் தோற்றுவிக்கக் காரணமாயும், இலக்கியச் செறிவு மிக்கதாயும் இருந்து உலக வழக்கு அழிந்தது வியப்புக்குரியது! அத்தகைய ஆரியமும் இலத்தீனும் எபிரேயமும், கிரேக்கமும் உலக வழக்கு அழிந்து சிதைந்திருக்க தமிழ் ஒன்று மட்டும் உலக வழக்குச் சிதையாதிருப்பது வியப்புக்குரியது! வியந்து பாராட்டி மகிழ்கற்குரியது! வாழ்த்தி வணங்கற்குரியது என்கிற இத்தகைய உணர்வோட்டத்தில்தான்-சிந்தை நடப்பிலேதான் சுந்தரம் பிள்ளையின் வாழ்த்துச் செய்யுள் பிறந்ததே தவிர—அத்தகைய உணர்வோட்டந்தான் முந்துகிறதே தவிர ஆரியத்தைப் பழிக்கும் உணர்ச்சி அதில் இல்லை—இருப்பதற்கான நியாயமும் இல்லை என்பது வெளிப்படை! இது நம் மறு விடை!

உள்ளதைச் சொல்வது என்பது வேறு; பழிப்பது என்பது வேறு! உள்ளதைச் சொல்வதே பழிப்பது தான் என்ருல் அதற்காக நாம் மிகவும் வருந்துகிருேம்; உள்ளதைச் சொன்னுல் தாங்க இயலாதவர்களாகத்தான் ஆரியத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் (அப்படி யாராவது இருந்தால்) இருப்பார்கள் என்று சுந்தரம் பிள்ளைக்கு தெரியாமல் போனதே என்பதற்காக நாம் உண்மையில் வருந்தத்தான் வேண்டும்! 'தேவபாடையை'த் தாய் மொழியாகக் கொண்டவர்களுக்கு உண்மையைத் தாங்க ஆற்றல் இல்லாமல் போனது விந்தைதான்!

மஞ்சரியில் எழுதிய கட்டுரையாளர், 'ஆரியம்போல உலக வழக்கழிந்து ஒழிந்து சிதையா' என்ற வரியில் சுந்தரம் பிள்ளை ஆரியத்தைப் 'பழித்தார்', 'இழித்துப் பேசினுர்', 'வடமொழியைத்' 'தாக்கிப்பேசினுர்' 'வைதார்' 'சாடினுர்' 'தூற்றிப் பேசினுர்' என்றே தன் கட்டுரையில் எங்கும் அங்கலாய்க்கின்ருர். தெரிந்து கொள்ளுங்கள், 'ஆரியம் உலக வழக்கழிந்த மொழி, என்று உண்மையைச் சொன்னுல் அதனை இத்தனை விதமாக ஒரு தமிழாசிரியர் மொழி பெயர்க்கின்ருர்!

பழிப்பது, இழித்துரைப்பது, தூற்றுவது, தாக்குவது, இகழ்வது என்ருல் ஒருவரைப் பற்றி இல்லாததை—வேண்டுமென்றே — வலிய —பழியாகச் சுமத்திக் கேவலப் படுத்துவதைத்தான் குறிக்கும்! ஆனுல் உண்மையைச் சொல்வதே பழிப்பதுதான் இழித்துரைப்பது தான், தூற்றுவதுதான் என்கிருர், ஒரு தமிழ்ப் பேராசிரியர்! இவரது தமிழறிவைக் கண்டு வியக்கிருேம்!

அவர் ஓரிடத்தில் தன் கட்டுரையில் ஒரு எடுத்துக் காட்டுத் தருகிருர். அதைப் படியுங்கள்:

குறள் நம் அனைவருக்கும் உரிய பொதுமறை. அதைப் போற்ற எனக்கு எப்படி உரிமை இருக்கிறதோ அப்படித்தான் இன்னொருவனுக்கு அதனைத் தூற்றிப் பேச உரிமையிருக்கிறது. ஆனுல்

(15-ம் பக்கம் பார்க்க)




[27]

## மனத்திரையில் மருட்சி!

அமைச்சர் முத்துமுடியாரிடம், ஆணைகள் பலவற்றை அடுக்கிவிட்டு, சோழதேவி தியாகவல்லியின் அறைக்குள் நுழையமுனைந்த மன்னரிடம், பணியாள் ஒருவன் வந்து, சோழ மாமன்னர், ஆரூர் அணி நகரத்து ஐயன் மனுச்சோழர் மாண்டுவிட்டதாக தமிழகத்திலிருந்து வந்துள்ள கவிஞர் ஒருவர் கூறுவதாகக் கேட்டதும், மன்னர் திடுக்கிட்டுப் போனார். அதுபோலவே, அச் செய்தியைக் கேட்ட தியாகவல்லியும் கலங்கி நிலைகுலைந்தார். முன்னே போய்க்கொண்டிருந்த முத்துமுடியாரை, வரப் பணித்து விட்டு, வெளியிலிருக்கும் கவிஞரை உடனே அழைத்துவரும்படி காவலனிடம்கூறிவிட்டு, சோகத்தால்தாக்குண்ட அதிர்ச்சியுடன் அங்கேயே ஒரு இருக்கையில் அமர்ந்தார். சோழதேவியும் தடுமாறி எழுந்து வந்து அரசருக்கருகில் அமர்ந்துகொண்டார். அதற்குள் முத்துமுடியாரும் வந்து சேர்ந்தார் அங்கே.

“கேட்டீர்களா அமைச்சரே! ஆரூர் ஐயன் நம்மை ஏமாற்றிவிட்டாராம்!” என்று கூறினார். அதனைக் கூறும்போது அவரது நாக்குழறத் தொடங்கிவிட்டது. எவ்வளவு கட்டுப்படுத்த முயன்றும் கண்களிலிருந்து வழியத் தொடங்கிய நீரைத் தடுக்க முடியவில்லை. தியாகவல்லி தேவியோ, தான் ஒரு அரசி என்ற நிலையையும் மறந்து வாய்விட்டுக் கதறத் தொடங்கிவிட்டார்.

அவர்களது நிலைமையே அப்படியென்றால், முத்துமுடியாரது நிலை எப்படி இருக்கும்?

மனுச்சோழர் மாண்டுவிட்டார் என்ற செய்தியை மன்னர் அறிவிக்காமல், பணியாள் ஒருவன் எடுத்துச் சொல்லியிருந்தால், செய்தியைச் சொன்னவனது தலையைத் துண்டாடி விட்டிருப்பார் முதலமைச்சர்.

மரணம் என்பது தவிர்க்க முடியாததுதான். ஆனால், அத்தகைய மரணம், ஒரு சிலரை மட்டும் பற்றிக்கொள்ளும்போது, சிலரது உணர்வுகள் ஒடுங்கிப் போய்விடுகின்றன. முழுதாக நிலைகுலைந்துப் போய்விடுகிறார்கள். அடுத்துச் செய்ய வேண்டிய செயலாற்றல்கூடக் குன்றிப்போய் விடுகிறது.

காரணம், மரணத்தால் பற்றிக்கொள்ளப்பட்டவர், முழுமைபெற்ற மனிதராக வாழ்ந்து மற்றவர்களையும் வாழச் செய்வதல்லவா! அங்க அவயங்கள் அனைத்தும் அப்படி அப்படியே எதுவும் குறைவின்றி இருந்தாலும், அவர்களிலும் மாக்கள் என்ற பகுதியினர் இருப்பதாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கு போது, மாக்களுக்கிடையே, ‘மக்கள்’ என்ற பிரிவி ஒருவராக இருந்த மனு மன்னரது மறைவு என்று எள்ளாளர் என்ன, தியாகவல்லி என்ன, முத்துமுடியார் மட்டுமென்ன! எல்லாருமே கலங்கிச் சோர்ந் போகவேண்டியவர்கள்தானே!

வெளியில் சென்ற காவலன், பழுத்து முதிர்ந் முதியவர் ஒருவரையும், உலகத்து அழகையெல்லா ஒன்றாகச் சேர்த்து உருக் கொடுக்கப்பட்ட அழகு தேவதையோ என்று ஐயுறத்தக்கவகையில் கட்டுட குலையாத கன்னி ஒருத்தியையும்அழைத்துக்கொண் வந்து மன்னர் முன் நிறுத்திவிட்டு, வணங்கி போனான்.

கண்களிலிருந்து வழிந்த கண்ணீரைத் துடைத் விட்டுக்கொண்டு அந்த முதியவரை ஒருமுறை ஏறிட டுப் பார்த்தார் மன்னர்!

நரைத்துத் திரைத்து, செம்பழுப்பேறியிருந் அவரது கூந்தலும், தாடி மீசையும் மன்னரது கண் ளுக்கு மங்கலாகத் தெரிந்தன. கண்களை கசக்கிவிட டுக்கொண்டு மறுபடியும் பார்த்தார். மன்னருக் ஒருவித மருட்சி ஏற்பட்டது. “கவிஞரா நீங்கள்? என்ற வார்த்தைகளை உதிர்த்தன அவரது உதடுகள்

“என்னைத் தெரியவில்லையா அரசே!” என் ஆர்வத் துடிப்புடன் கேட்டவர், “எப்படித் தெரி முடியும்? முப்பது, நாற்பது ஆண்டுகளுக்கு முன் இருந்த கட்டுடல் இன்றெனக்கு இல்லையே! சதை திரள்கள் சுருங்கி, சோர்ந்து, தொய்ந்து விட்டனவே அல்லாமல், சிந்தித்து உணரும் மன ஆற்றலையு கெடுத்துவிட்டேனே நான்!” என்று கூறிவிட் அருகே இருந்த இளம் பெண்களின் கரங்களைப் பற் நெருக்கி அணைத்துக்கொண்டு, “மகளே! மன்னருக் என்னை அடையாளம் புரியவில்லை! எடுத்துச் சொ லவும் எனக்கு மனம் வரவில்லை. என்னைப் பிற பிறர்க்கு எடுத்துச் சொல்லியே வாழ்ந்துவிட்டவ அம்மா நான்! இனி உன் கதி...” என்று சொல்லி கொண்டிருக்கும்போதே மன்னர் எழுந்து, தன்னை திடப்படுத்திக் கொண்டு, முதியவரின் அருகி சென்று, அவரைக் கூர்ந்து நோக்கிவிட்டு, “கவிஞ திலகமே! கொல்லன் அழசியல்லவா நீங்கள்” என் கூறி அப்படியே அவரை ஆரத் தழுவிக்கொள் முயன்றார்.

மன்னர், தன்னை அடையாளம் கண்டுகொண் விட்டார் என்பதை உணரத் தொடங்கியதுமே தான் அணைத்துக் கொண்டிருந்த எழில் கன்னியை அப்புறம் நகர்த்திவிட்டு, மன்னரது அரவணைப்புக்கு தன்னைத் தயார்ப்படுத்திக்கொண்டுவிட்டார் கவிஞர்

அமைச்சர் முத்துமுடியாரால், அதற்குமே அமைதியாக இருக்க முடியவில்லை. “கவிஞர் பெ

னே! ஆரூர் ஐயனைப் பற்றிய செய்திகளைக் கூறுங்
ர்!" என்றார்.

அதற்குள் இருக்கை சேர்ந்தார் மன்னர். அரு
ந்த தியாகவல்லி தேவியும், கவிஞரைப் பார்த்து,
தலில் அமருங்கள் பெரியவரே!" என்றார்.

கவிஞர் அமர்ந்துகொண்டே சொல்லத்
தொடங்கினார்.

"அரசே! அந்தக் காட்சி இன்னமும் என்கண்களை
ட்டு மறையவில்லை. இனி என் மறைவு வரையிலும்
து மறையவே மறையாது. ஐயோ, அரசே! அதனை
படி நான் இங்கு எடுத்துரைப்பேன்!" என்று
சொல்லிக்கொண்டிருக்கும்போதே கோபமடைந்து
ட்ட முத்துமுடியார், கவிஞரை நோக்கி. "கவிஞர்
பருமானே! கவிஞர் என்ற முத்திரையைப் பொறித்
க் கொண்டவுடனேயே, எந்த ஒரு செய்திக்குமே
ன்னைப் பூச்சு இடத் தொடங்கி விடுகிறீர்கள்!
நு மன்னர் மாண்டார் என்ற செய்திக்கு விளக்கம்
கூருகிற நேரத்தில், நீங்கள் மரணத்தின் காட்சி
பற்றிய வருணனையில் இறங்கப் போகிறீர்கள். செய்
யின் சுருக்கத்தைக் கூறுங்கள் முதலில்!! என்றார்.

கொல்லன் அழிசி என்ற சேர நாட்டுக் கவிஞரின்
ழும், பெருமையும் ஒருவேளை முத்துமுடியாருக்குத்
தெரியாமற் போகலாம், அவரை, முழுதும் அறிந்தவ
க எள்ளாளர் அங்கே இருக்கிறாரே! என்றாலும்,
செய்தியின் முக்கியத்துவம் கருதி, அதனை அவர்
சுருக்கமாகக் கூற முனைந்திருக்கலாம் என்ற இதயத்
ன் உணர்வு மூலம், முத்து முடியார் சொன்னதை
மோதிப்பவர்போல "சொல்லுங்கள் கவிஞர்
பெருந்தகையே!" என்றார்.




"சொல்லத்தான் நினைக்கிறேன் அரசே! சொற்கள் வர மறுக்கின்றன!" என்று கூறி, கண்களில் முத்திட்டு நின்ற நீரைத் துடைத்துக்கொண்டு "அரசே! சோழமா மன்னரது ஆவி, காற்றோடு கலந்து விட்ட அந்த நேரத்தில் இந்தப் பாவி, ஐயனின் ஆரூர் அரண்மனையில்தான் தங்கி இருந்தேன். வீதி விடங்கனின் நிலை, பரிதாபகரமா யிருந்தது. என்றாலும் அரசே, அவர் கடைசியாகச் சொன்னது என்ன தெரியுமா? என் பெயருக்குக் களங்கம் ஏற்படாமல், எள்ளாளர் இலங்கையில் இருக்கிறார்! நான் சாகவில்லை. எள்ளாளர் வடிவில் இருக்கிறேன்! எள்ளாளராக இருக்கிறேன் என்பதுதான் அரசே!" என்று கூறிவிட்டு மீண்டும் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

எவ்வளவோ சிரமப்பட்டு, கட்டுப்படுத்தி வைத்துக்கொண்டிருந்த எள்ளாளரது மனம், கவிஞர் சொன்னதைக் கேட்டதும் மிகவும் நெகிழ்ந்து போய் விட்டது.

"ஐயோ தெய்வமே!" என்று வாய்விட்டு அலறி விட்டார். சூழ இருந்தவர்கள் அனைவருக்குமே மிகச் சங்கடமாக இருந்தது.

"சோழ அரசாங்கத்தின் சார்பில், இதுவரையில் அதிகார பூர்வமான தகவல்கள் எதுவும், ஏன் அனுராதபுரத்துக்கு அனுப்பப்படவில்லை" என்று கேட்டார் முதலமைச்சர், அவரைப் பார்த்து.

"அன்றைக்கே, அறிவிக்கும்படிதான் வீதி விடங்கன் உத்திரவிட்டான். ஆனால் நான்தான் அதனைத் தடுத்துவிட்டேன். நீதிபிறழாத ஒரு மன்னரை இழந்தது போதும்; இன்னொரு இழப்புக்கு இடமுண்டாக்க வேண்டாம் என்று நான்தான் கேட்டுக்கொண்டேன். ஏனென்றால், எனக்கு நன்றாகத் தெரியும், எள்ளாளச் சோழப் பேரரசரின் இதயமும், அவருக்கு மன்னர் மனுநீதியிடம் உள்ள பாசமும். அதனால்தான் தடுத்தேன்"—என்று முத்து முடியாரைப் பார்த்துக் கூறிய கவிஞர், மன்னரைப் பார்த்து, "மன்னர் பெருமான் அவர்களே, தாங்கள் இந்தச் செய்தியை ஒரு கெட்ட கனவாகக் கருதி, உடனே மறந்துவிட வேண்டும்! எங்களைப் போன்றவர்களுக்கெல்லாம் ஆறுதல் கூற வேண்டியவர்களாக நீங்கள் மாறிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ள இந்தத் தமிழ்க் கவிஞனுக்கு உரிமை தரவேண்டும்" என்று கூறி மன்னரது முகத்தைக் கூர்ந்து பார்த்துக் கொண்டு அமைதியானார்.

"ஆமாம் கவிஞரே! நான் மறந்துவிடத்தான் வேண்டும். என்னையும், என் மனைவியையும், இந்த நாட்டையும், நாட்டவரின் நலனையும் அனைத்துயுமே மறந்துவிடத்தான் வேண்டும். மனு மன்னர் போன இடத்துக்கு உடனே நான் பறந்துவிடத்தான் வேண்டும்" என்று சொல்லி, மேலும் எதையோ சொல்ல சிந்திப்பவர்போல நிறுத்தினார் எள்ளாளர். குறுக்கிட்ட முத்து முடியார்," கவிஞர்பெருமான் அவர்கள் கூறும்போது, அரசே! நான் எள்ளாளராக இருந்து கொண்டிருப்பேன் என மனு மன்னர் சொன்னதாகச் சொன்னாரே, கவனித்தீர்களா அரசே! நீங்கள் அனைத்தையுமே மறந்து விடுவதாக இருந்தால், மனு மன்னரது அந்த ஆழமான நம்பிக்கையினையும் மறந்து விட்டவர்கள் என்று ஆகிவிடுமே அரசே! நீங்கள் அதனை விரும்பமாட்டீர்களே பிரபு" என்று சோகம் ஒட்டு மொத்தமாகச் சேர்ந்த குரலில் கூறினார், "பிரபு, என் இந்த திருமாங்கல்யத்திற்கு

வாழ்வளியுங்கள் பிரபு! உங்கள் விரிந்தகன்ற மார்பகத்தில் சாய்ந்திருக்கும் என் கூந்தலை நீங்கள் கோதிக்கொண்டிருக்கின்ற அந்த இன்ப வேளையில், உங்கள் மடிமீது கிடந்தபடியே என் உயிரை விட நீங்கள் எனக்கு வரம் தாருங்கள் பிரபு'' என்று சோழதேவி தியாக வல்லி, மன்னரின் கால்களில் விழுந்து, கால்களைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டு கேவத் தொடங்கிவிட்டார்.

தானே பிறரால் தேற்றப்பட வேண்டிய நிலைக்கு ஆளாகிப்போன எள்ளாளருக்கு, தேவி கேட்ட வரத்தைத் தரமுடியுமா : என்பது பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்க நேரமேது? என்றாலும் அவரது உதடுகள் ஏதோ சில வார்த்தைகளை உதிர்த்தன. அவர் என்ன கூறுகிறார் என்பது அவருக்குத் தெரியாதது போலவே, அருகிலிருந்தவர்களுக்கும் புரியவே இல்லை. ஆமாம் மன்னரது வார்த்தைகள் குழறத் தொடங்கிவிட்டன! என்றாலும், கால்களில் விழுந்த தேவியாரைத் தூக்கி நிறுத்தி தன்மீது சாய்த்துக்கொண்டார்.

கவிஞர் கொல்லன் அழிசி, தம் கண்களைத் துடைத்து விட்டுக் கொண்டு. தன் அருகே நின்ற அந்தப் பெண்ணை ஏறிட்டுப் பார்த்தார். ஏறக்குறைய அவளும் மூர்ச்சித்து விழும் நிலையை அடைந்திருந்தாள், அங்கே நிகழ்ந்துகொண்டிருந்த நிகழ்ச்சிகள், நடைபெற்ற உரையாடல்கள் காரணமாக.

ஏறக்குறைய முத்து முடியாரும், அதே நிலைக்கு ஆளாகிப் போய் இருந்தாலும், செயல் திறனை அவரும் இழந்துவிட்டவராக இருந்தால், அனுராதபுரத்தின் நிர்வாக இயந்தியம் சீர் குலைந்துதான் போயிருக்கும். ஈழத்தின் வரலாறு அவர்களைப் பற்றிக் குறிப்பிட நாணித்தான் இருக்கும்.

முத்து முடியார், விரைவில் தன்னைச் சமாளித்துக்கொண்டு பணியாள் ஒருவனை அழைத்து, கவிஞரையும், காரிகையையும் விருந்தினர் இல்லத்துக்கு அழைத்துச் சென்று, அடுத்த உத்திரவு வரையில் அங்கேயே தங்கி இருக்க ஏற்பாடுகள் செய்யப் பணித்தார்.

கவிஞரும், இளம் பெண்ணும் மிகுந்த வேதனையுடன் அந்த இடத்தை விட்டு அகன்றனர். அவர்கள் சென்றதும், மன்னர் நின்ற இடத்துக்கு நெருக்கமாக வந்து நின்று, "அரசே! மருத்துவருக்குச் சொல்லி அனுப்பட்டுமா'' என்றார்.

மன்னர் எதுவும் பதில் பேசவில்லை, மார்பின்மீது சாய்ந்துகொண்டிருந்த தேவியை, மெதுவாக இருக்கைமீது அமரச் செய்துவிட்டு, தானும் அமர்ந்து கொண்டார். கண்கள் அருவியாகிக் கொண்டிருந்தன.

மறுபடியும் முதலமைச்சர், மன்னரிடம் "மருத்துவருக்கு ஆள் அனுப்பட்டுமா அரசே!'' என்று கேட்டார். இப்போது மன்னர் அமைச்சரை ஏறிட்டுப் பார்த்து, "அவசியமில்லை அமைச்சரே! நீங்கள் சென்று வாருங்கள்!'' என்று கூறினார். மிகத் தயக்கத்தோடு முத்துமுடியாரும் அங்கிருந்து அகன்றார்.

தனியாக விடப்பட்ட மன்னரும்; தியாகவல்லி தேவியும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். இருவருக்குமே வாய்விட்டு அழவேண்டும் என்பது போன்ற உணர்ச்சி எழுந்தது. அவர்கள் அரச குடும்பத்தினர்களாயிற்றே! மனம் விட்டு அழுவதற்குக் கூட தடைகள் உண்டே! அது மன்னர் குடும்பத்தின் கோழைத்தனம் என்று எடுத்துக் காட்டப்பட்டு விடுமே!

எவ்வளவு நேரம்தான் அந்தத் தனித்த சூழல் இருந்ததென்று தெரியவில்லை. அந்த நேரத்தில் அவர்கள் இருவரும் என்னென்ன எண்ணினார்கள் என்பதும் புரியவில்லை.

இருள் வந்து கவிந்துகொண்டிருந்தது. அதனைத் தடுக்க ஒளிவிளக்குகள் ஏற்றிவைக்கப் பட்டிருந்தன.

பணிப் பெண் ஒருத்தி தேவியின் அருகே வந்து வெகுநேரமாக நின்றுகொண்டிருந்தாள், தேவி எப்போது தன்னைப் பார்ப்பார் என்று எதிர்பார்த்து.

பணிப்பெண் நினைத்தது வீணாகப் போகவில்லை. நின்றுகொண்டிருந்தவளைப் பார்த்து சோழதேவி "ஏன் நிற்கிறாய்? என்ன வேண்டும் உனக்கு'' என்று கேட்டார்.

"நள்ளிரவு ஆகப் போகிறது தேவி! தாங்கள் உணவருந்தாமல் இருக்கிறீர்கள்'' என்றாள் பணிவாக.

சுயநினைவுகள் அனைத்தும் தேவியாருக்கு மீண்டுவிட்டதுபோன்ற தன்மையில், "அப்படியா! நீ போ!'' என்று அவளை அனுப்பிவைத்துவிட்டு, மன்னரை நெருங்கி, உடலை உலுக்கி, "பிரபு! எழுந்திருங்கள் பிரபு! படுக்கைக்குப் போகலாம் எழுங்கள் பிரபு!'' என்றார்.

எள்ளாளர், இதுவரையில் கழித்துவிட்ட நாட்களில் இப்படியொரு நிகழ்ச்சி நடந்திருக்கும் என்று அவரே கூறமாட்டார். தேவியின் அழைப்பு, எள்ளாளரது செவிப்பறைகளை, மிக மெள்ள தட்டியது. அது, அவரை உணர்வுபெறச் செய்யப் போதுமானதாக இல்லை. மீண்டும் மீண்டும் தேவி அவரை உலுக்கிக்கொண்டே 'பிரபு!' என்று கதறிவிட்டார்,

இப்போதுதான் அவருக்கு உணர்வு திரும்பியது. தூங்கி விழிப்பவர் போன்ற நிலையில் நிதானம் பெற்று, கண்களை கசக்கிவிட்டுக்கொண்டு, "என்ன தேவி!'' என்றார். "படுக்கையில் சென்று படுக்கலாம் பிரபு'' என்று கூறி, மன்னரது கரங்களைப் பற்றிக் கொண்டார் சோழதேவி.

மன்னர் பதிலேதும் பேசாமல், தேவியைத் தொடர்ந்தார், படுக்கை அறைக்கு.

ஃ ஃ ஃ

பொழுது விடிந்துவிட்டது. முதலமைச்சர் முத்துமுடியார் மிகவும் சுறுசுறுப்புடன் காணப்பட்டார். தன் துணைவி அருங்குணாவிடம், "குணா கடந்த இரண்டுமாதகாலமாக அனுராதபுரத்து அமைதிக்கு வெவ்வேறு வடிவங்களில் ஆபத்துக்கள் வந்து கொண்டிருக்கின்றன. மனு மன்னரின் மரணத்தால், எள்ளாளப் பேரரசர் நிலைகுலைந்து விட்டார் சென்ற இரவு! அவரே அப்படியென்றால்...'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது அருங்குணம் குறுக்கிட்டு, "நீங்கள் எந்த மூலைக்கு? என்று முடித்துவிடாதீர்கள். நீங்கள்தான் இந்த நேரத்தில் மிகத் தெளிவாக இருக்கவேண்டும்'' என்று முடித்துவைத்தார்.

"ஆமாம் குணா! நான் இப்போது மிகத் தெளிவாக இருக்கிறேன். தமிழ்நாட்டுச் செய்தி மன்னருக்குக் கிடைக்குமுன்பு, சில உத்திரவுகளைப் பிறப்பித்தார் மன்னர். அவற்றை உடனே செயல்படுத்த வேண்டும்!''—என்று கூறி இருக்கையிலிருந்து எழ முயன்றார் மன்னர்.

"எவற்றை உடனே செயல்படுத்தவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் ஆசைப்படுகிறார்கள்'' என்று கேட்டுக்கொண்டே தளபதி தியாகராயர் அங்கு வந்து நின்றார். அருங்குணத் தேவியார்,

தியாகராயர் அங்கு வந்ததும், மாளிகையின் உள்ளே புகுந்துவிட்டார். தேவியார் அகன்றதும் மீண்டும் தளபதியார், "அமைச்சர் அவர்களே, நான் கேள்விப் பட்டதெல்லாம் உண்மைதானா?" என்றார்.

"தமிழ்நாட்டைப்பற்றியும், இலங்கையைப்பற்றியும் நீங்கள் எது கேள்விப்பட்டிருந்தாலும் அவை இப்போது முற்றிலும் உண்மைதான்!" என்றார் அமைச்சர்.

"மன்னர் தமிழ்நாட்டுக்குப் போய்வர விரும்புகிறாரா?"

"விரும்பமாட்டார்! போய்விட்டால், திரும்ப மாட்டார்."

"அப்படியானால்..."

"நாம் நிறைவேற்றித் தீரவேண்டிய சில கடமைகளை உடனடியாக நிறைவேற்ற முனைந்துவிட வேண்டும்."

"சொல்லுங்கள் அமைச்சரே!"

"தளபதியாரே! நீங்கள் உடனடியாகத் தம்பளை குகைக் கோவிலுக்கு சில வீரர்களை அனுப்பி அங்கே ஒரு பக்கத்தில் குவித்து வைக்கப்பட்டிருக்கும் சில வகை போர்க் கருவிகளை, நம் பாடிமனையில் கொண்டு வந்து தனியாக வைத்திருக்கச் செய்யுங்கள். தம்பளைக் குப் போகும்போது உடன் உலகாயதனையும் அழைத்துச் செல்வது உங்களுக்கு உதவிகரமாக இருக்கும். அடுத்து...!"

"...விரைவாகச் சொல்லுங்கள் அமைச்சரே!"

"என் வாய்க்குள் புகுந்து. நீங்களே வார்த்தைகளை எடுத்துக்கொள்வீர்கள் போலிருக்கிறதே!" என்று கூறி சிரித்தார் அமைச்சர்.

தளபதியும் சிரித்துக்கொண்டு "ஒன்றைத் தெரிந்துகொள்வதில் அத்தனைத் துடிப்பு ஏற்பட்டு விடுகிறது. என்ன செய்வது? அப்படியே பழகிவிட்டேன்" என்றார்.

"தளபதியாரே! போர் வீரர்கள் திரட்டவும், புதுக் கருவிகளின் உற்பத்திக்கும், நீங்கள் உடனே உத்திரவிடலாம்" என்று கூறினர் முத்துமுடியார்.

தளபதியின் விழிகள் வியப்பால் விரிந்தன. "போர் நடவடிக்கைக்கு மன்னர் அனுமதி வழங்கி விட்டாரா? மகிழ்ச்சி, அமைச்சரே! மகிழ்ச்சி!" என்று துள்ளிக்குதித்தார் தளபதி. "அதுசரி, அமைச்சரே! தம்பளைக் குகையில் போர்க் கருவிகள்......" என்று முடிக்க முடியாமல் திணறினர்.

"அதுபற்றிப் பிறகு பேசுவோம்! நீங்கள் உத்திரவுகளை, உரிய வாரியங்களுக்கு அனுப்புங்கள். இது தொடர்பாக இன்று தாங்கள் மன்னரைப் பார்க்கவேண்டாம்!" என்று கூறிவிட்டு, "சென்று வாருங்கள்!" எனச் சொல்லி எழுந்தார்.

"இன்று ஏன் மன்னரைப் பார்க்கக்கூடாது என்று கூறுகிறீர்?" என்ற ஐயத்துடன் திரும்பிய தியாகராயர், ஒரு வேளை தமிழ்நாட்டுச் செய்தியே காரணமாக இருக்கலாம் என்று சரியான ஒன்றையே சமாதானமாக




எண்ணிக்கொண்டு நடந்தார். அவரது கற்பனை மனத்தில், நந்திமித்திரனைப் பிடித்துவிட்டதுபோன்றும், தலையைக் கொய்து மாவலிக் கங்கைக்கரையில் சூலம் நிறுத்தி அதிலே நிறுத்திவைத்துவிட்டு, அருகே நின்று அந்த முகத்தின்மீது காரி உமிழ்வது போன்றும், இகழ்ச்சியாகச் சிரித்து அமர்க்களப்படுத்துவது போன்றும் காட்சிகள் உருவாகிக் கொண்டிருந்தன.

---

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாரு—தேவி! இந்தப் பாடுபடுத்தி விட்டாங்க பக்தர்னு சொல்லிக் கொள்கிறவங்க — அதனாலேதான் எனக்கு பயம் ஏற்பட்டுவிட்டது- நிஜமாச் சொல்றேன், இனி இந்த பக்தர்களை நம்பிப் பிரயோஜனமில்லே—ஏதோ பூஜை செய்கிறுங்களேன்னு பூரிப்படையறதிலே அர்த்தமில்லே. இனி நமக்கு அவங்க தயவு வேண்டாம்—சகவாசமே கூடாதுன்னு தோணிவிட்டுது"—என்று கருப்பண்ணசாமி தன் கதையைக் கூறி முடித்தார். தேவியும், கதையைக் கேட்டுக் கலக்க மடைந்தார்கள்.

"ஆமாம்! இனி இந்தப் பக்தர்களை நம்பக்கூடாது" என்று தேவியும் தீர்ப்பளித்தார்கள்.

"நாம் இரண்டு பேரும் மட்டும் தீர்மானித்தால் போதுமா தேவி! நம்ம கூட்டம் பெரிதல்லவா? எல்லோருக்கும் எடுத்துச் சொல்லி, இனி இந்தப் பக்தர்களிடம் நாம் சிக்கிச் சீரழிவுபடக்கூடாது. பக்தர்கள் வேண்டாம்" — என்று தீர்மானம் நிறைவேற்றினால் தானே நல்லது என்றார் கருப்பண்ணசாமி.

"ஆமாம் கருப்பண்ணரே! பக்தர்களால், நம்மவர்களுக்கு ஏற்பட்டு வரும் சீரழிவுகளையும், எத்தர்கள் ஏமாளிகளை ஏய்க்க நம்மைக் கருவியாகக் கொள்ளையும் விளக்கமாகக் கூறி, நமது நண்பர்களுக்கும் இனி இப்படிப்பட்ட இடைஞ்சல் ஏற்படாதபடி பார்த்துக் கொள்ளத் தான் வேண்டும். நாம் இதற்காக ஒரு தனி மாநாடு கூட்டிவிடவேண்டியதுதான். இனிப் பொறுக்க முடியாது. நான் வரவேற்புக் கழகத்துக்குத் தலைமை தாங்கிவிடுகிறேன்—திறப்புவிழா நீ நடத்திவிடு—தலைமைக்கு யாரை அழைக்கலாம்........." என்று தேவியார், ஆர்வத்துடன் கேட்டார்கள்.

"யாரை அழைக்கலாம்?"-என்று கருப்பண்ண சாமியும் யோசிக்கலானார்!

[இவ்வாண்டு ஆகஸ்ட் மாதத்தில் லால்குடிக்குச் சமீபத்தில் உள்ள புஞ்சை சாங்குடி என்ற கிராமத்தில், இரு கட்சிகள் ஏற்பட்டு கருப்பண்ணசாமியை மண்டபத்தில் போட்டு பூட்டி விட, போலீஸ் உதவியுடன் பூட்டு உடைக்கப்பட்டு, சாமி கோயிலில் கொண்டுபோய்ச் சேர்க்கப் பட்டார் என்றசெய்தி இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழில், ஆகஸ்ட் 22-இல் வெளிவந்தது. அந்த உண்மைச் சம்பவத்தைப் பின்னணியாகக் கொண்டு தீட்டப் பட்டது இந்தக் கற்பனை.]

★

## முக்கிய அறிவிப்பு

"காஞ்சி" ஆண்டு மலரையொட்டிய பணிகள் காரணமாக 3 - 10 - 71 ஆம் நாள் "காஞ்சி" இதழ் வெளிவராது என்பதை அனைவருக்கும் அறிவித்துக்கொள்கிறோம்.

—ஆசிரியர்.

# தொடர்ச்சிகள்

(10-ஆம் பக்கத் தொடர்ச்சி)

நம் மனநிலை என்ன? குறளை வான ளாவப் போற்றுங்காலே வரவேற் கிறோம் போற்றியவரையும் வாழ்த் துகிறோம். குறளைக் குறை கூறி யோரைக் குற்றஞ் சாட்டுகிறோம். குறை கூறுகிறோம். இப்பரந்த நோக்கால்' சிறந்த போக்கால் பைந்தமிழ் சிறுத்துச் சீர்குலைவதை யும் சிறக்காது சீர்மை குன்றிப் போவதையும் பார்க்கிறோம்."

எப்படித் தமிழாசிரியர்? திருக் குறளைக் குறை கூறுகிறார்களாம்! அது 'நம்' அனைவர்க்கும் உரிய பொதுமறையாகும். அந்த 'நம்' என்ற சொல்லுக்குள் யாரெல் லாம் இருக்கின்றார்களோ தெரிய வில்லை. பிறகு 'பொது மறை' என்றால் என்ன பொருள் என்ப தும் விளங்கவில்லை, இன்னும், அந்த 'நம்' என்னும் சொல்லில் தங்களைப் புகுத்திக் கொள்ளாத வர்கள் யார் யார் என்பதும் நமக்கு விளங்கவில்லை. இப்படிப் பட்ட தமிழாசிரியர்களும் இருக் கின்றார்களே...! இப்படிப்பட்டவர் களை வைத்துக்கொண்டு தமிழக அரசு எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற கொள்கையை நிறை வேற்றப் பாடுபடுகிறதே...!

முடிவில் கட்டுரையாளர் தன் னையும் அறியாமல் தன்னையே மறுத்துக் கொள்ளும் வகையிலான ஒரு உண்மையை எழுதுகிறார்; "பல்வேறு வகையில் நம் பாராட் டுக்குரிய சுந்தரனாரைப் பலபடி யாக நாம் பாராட்டினும் அவரது படைப்பில் உள்ள குற்றங்களையும் பகர்வதுதானே நடுநிலை நல்லாய் வாளன் கடமை? சிறப்பினைப் போற்றுவதோடு சீர்கேட்டினையும் உணர்வதுதானே, உணர்த்துவது தானே முழுமையான பார்வை யாகும்?" இது அக்கட்டுரையாளர் கேள்வி!

'சுந்தரம் பிள்ளை பாட்டில் குறை. அதனைச் சுட்டிக் காட்டு வது முறை! முழுமையான பார்வை!!' என்கிறவர் ஆரியத் தினைப் பற்றி உண்மையைச் சொல்லும்போது மட்டும் ஏன் கொதிக்க வேண்டும் என்பதுதான் நமது கேள்வி! இவருக்குச் சுந்தரம் பிள்ளையின் குறை (அப்படியொன் றிருக்கிறது என்பதை வாதத் துக்கு ஏற்றுக்கொண்டால்)யைச் சுட்டிக் காட்ட இருக்கும் உரிமை, ஆரியத்தின் குறையை — அதுவும் உலகு ஒப்புக்கொண்ட - அதனைத் தாய்மொழியாகக் கொண்ட எவ ருமேகூட மறுக்க இயலாத குறை யைச் சொல்ல சுந்தரம் பிள்ளைக்கு மட்டும் இல்லையா?

சுந்தரம் பிள்ளை சொல்லும் போது மட்டும் பண்பை வைத்து அளக்கவேண்டும் — இவர் சொல் லும்போது மட்டும் அதை வைத்து அளக்கக் கூடாதோ? ஒருவேளை அவரிடம் அது இல்லை என்பதால் இருக்கலாம்!

கட்டுரையாளரைப் பற்றி மட்டு மல்ல, அதனைப் பெரியதோர் ஆராய்ச்சி, மறுக்கவே இயலாத மகாப் பெரிய கட்டுரை என்று வெளியிட்டுள்ள மஞ்சரியின் அறிவு எத்தகையது; அதன் மன அரிப்பு எத்தகையது என்பதையும் தமி ழுலகும் தமிழக அரசும் அறிந்து கொள்ள வேண்டும்!

தமிழுக்குப் பகை ... எதிர்ப்பு வெளியிலிருந்தல்ல; தமிழகத்தின் உள்ளேயே தான் என்பதை உணர்ந்து உண்மைத் தமிழர் விழிப்புடன் பணிபுரிய வேண்டு கிறோம்.

---

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவேளை...!!

இராஜாஜிக்குச் சிலையெடுக்கப்பட்ட நினைவில் இப்படிச் சொல்லிவிட்டேன் என்கிறாரா?

அப்படியே பார்த்தாலும் இது பிரஞ்சு நாடில்லையே!!

அகில உலகப் பிரச்சனைகளையெல் லாம் அலசிஆராயும் தினமணியார் தூங்கிக் கிடக்கும் புலியின் வாலை உருவிவிடுகிறாரா?

வியட்நாம் பிரச்சனையானாலும், 'பங்களா தேஷ்' பிரச்சனையானா லும் அமைதிக்கு வழி கூறும் அறிவுக் கொழுந்துகள், அமைதிப் பூக்காடாய் இருக்கும் தமிழகத்தை ஆர்த்தெழுங்கள் என்று உசுப்பி விடுகிறார்களா?

கோயிலுக்குள்ளேயே கற்பழிக் கும் குணத்தினர்களும், தெய்வத் தின் படங்களின் பின்னாலே திருட் டுக் கணக்குப் புத்தகங்களை மறைத்து வைக்கும் மனத்தினரும், காமகோடி பீடங்களின் படங்களை யும், சங்கராச்சாரிகளின் படங்களை யும் வீட்டிலே சட்டமிட்டு மாட் டிக்கொண்டு ஈனத்தனத்தைச் செய்து எட்டடுக்கு மாளிகைகளில் வாழ்ந்துவரும் இழி பிறவிகளும் இன்னும் திருந்தாதபோது, "யார் திருந்தவில்லையென்று யார் வருத்தப் படுவது?"

தினமணியாரே! 'இந்து' திருந்த வில்லையே என்று 'எக்ஸ்பிரஸ்' வருந்தலாமா?

பிரஞ்சு நாட்டுத் தீயவர்களின் சிலைகளைப் பார்த்தாவது தீயவர் களே! தமிழகத்தைத் தீயாய்த் தீய்ப்பவர்களே! திருந்தி வாருங் கள் என்று, ஓட இடம் தேடும் உங்களையெல்லாம் கப்பலேற்றி விடும் காலத்தை நோக்கி விரை வாக ஓடவேண்டாம் என்று எச்ச ரிப்பதைத் தவிர வேறொன்றும் சொல்லுவதற்கில்லை!!

தமிழகத்தைத் தூய்மைப்படுத் தும் காலம் தானாகக் கனியட்டும்!!

★

---

# பேசமாட்டாய்

தெங்களியும் தேனமுதும் திரண்டா லன்னத்
தெளிதமிழில் எளியவரை நிகழ்த்தும் அன்று!
மாங்குயிலும் மணிதமிழும் குரலைக் கேட்டே
மாய்ந்துவரும் — தமதினத்தான் பாடு தென்று!
தேங்கலிலாத் திறந்துவிட்ட கடல்ம டைபோல்
தீங்குழம்பை வென்றிகொள ஓடும் பேச்சின்
பாங்கினையே நானென்னிப் பாடுகின்றேன்!
பகுத்தறிவே! உனைத்தானே தேடுகின்றேன்!

— புலவர் சீ. கதிர்மணி

# "காஞ்சி"

# ஏழாம் ஆண்டு மலர்

## அறிஞர் அண்ணாவின்
## இரத்தம் பொங்கிய இருபது ஆண்டுகள்

எனும் வரலாற்று ஓவியம்

மற்றும்,



மாண்புமிகு முதலமைச்சர்:
**கலைஞர் கருணாநிதி,**

**திரு. நாவலர் நெடுஞ்செழியன்,**
**,, என். வி. நடராசன்,**

**திரு. அன்பில் தர்மலிங்கம்,**

ஆகியோரது அண்ணாவைப் பற்றிய
படப்பிடிப்புக்களுடன்,

தமிழகத்தின் முன்னணி
எழுத்தாளர்கள் பலரும் படைக்கும்
கதை, கட்டுரை, கவிதைகள்!

எல்லாமாகச் சேர்ந்து

முல்லைச்சரமாக—முத்துக் குவியலாகத் தயாராகிறது.

வழக்கம்போல் காஞ்சிக்கேயுரிய பலவண்ண முகப்பு

**10-10-71 இல்**
வெளிவருகிறது!

விலை
ஒரே ரூபாய்தான்!

...யர் வெளியிடுபவர் சி.என்.ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3